[illegible]

V4. No 6. [illegible] 1927

4 – 6

3L
[illegible]
M27.4.6
[illegible]10365

China Silk Suitings, A best washing silk. 27″wide.

Prices ranging from Rs. 3, 4, 5 & 6 Per Yard.

Best Silk Shirtings, Fuji Silk Shirtings. Available in plain as well as with stripes. Width 27″

Rs. 2-4 Per Yard.

Jap Silk Shirtings, With Beautiful Stripes. 27″ wide.

No. 1 Quality Rs. 3-12 Per Yard.
No. 2 Quality Rs. 2-8 ,,

Superior Poplin, A beautiful silky material suitable for smart dresses

Double width. Available in Shell Pink, Mauve Lemon, Pale Blue, Saxe, White, Black, Fawn and Brown shades. 54″ width.

Rs. 2-4 Per Yard.

Corded Poplin, A very thick stuff with cords. Wonderful value.

Silky appearance. Available in all colours, and also black 54″ width.

Rs. 3-12 Per Yard.

K. S. MUTHIAH & CO., Esplanade, Madras.

English Tussore, Wonderful value in washing cotton material.

Best hard wearing Tussore suitings in numerous shades, i.e., Black, Biscuit, Lemon, Pale Blue, Fawn, Brown and other shades. 28″ width.

Rs. 1-2 Per Yard.

Madras Tussore, Suitings in numerous shades. Very popular ones. Will stand wear and tear. 28″ width.

No. 1. Annas 12 per yard. No. 2. Annas 11 Per Yard.

Calicut Checks, Fast colours in numerous Tweed designs.

Annas 14 Per Yard.

White Drill, For Trousers, Coats, Etc. Special quality. 28″ width.

No. 1. Annas 14 Per Yard. No. 2. Annas 12 Per Yard.

Khaki Drills, For Shorts. Very thick quality Fast colour. 28″ width

Annas 14 Per Yard. No. 2 Quality Annas 12 Per Yard.

K. S. MUTHIAH & Co., Esplanade, Madras.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா.

பத்திராசிரியர் : K. S. சுந்தரம்.

மலர் 4. அக்ஷயஞூ தைமீ 1927 ஜனவரிமீ இதழ் 6.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	247
2.	நான்மறைகளின் சிறப்பியல்பு	249
3.	மறுமணம்	256
4.	செல்வச் சிறுமியர் களிப்பு	260
5.	தாய்நாட்டின் மாற்றூர்	262
6.	வெண்ணிலா	263
7.	வழிபறிக்காரராம் வால்மீகர்	265
8.	மெய்ப்பொருள் நாயனூர் சரிதை	271
9.	அறிவின் பயன்	274
10.	நங்கையர் துயரமும் நாட்டின் விடுதலையும்	282
11.	கற்பிலக்கணம்	286
12.	இன்ப துன்பம்	288
13.	நகர வாழ்க்கையும் கிராம வாழ்க்கையும்	291
14.	மதிப்புரை	297
15.	லக்ஷ்மி பஞ்சாங்கம் : தைமீ மாசிமீ	299
16.	சித்தர்கள் ஓரை சாஸ்திரம்	300

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210365

நேயர்களின் கவனிப்பு

சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, ரங்கூன், சிலோன் முதலிய உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
சிங்கப்பூர், பினங்கு, ஆப்பிரிக்கா முதலியன போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0

ஜீவியசந்தா உள்நாடுகளுக்கு ரூ. 40.
,, வெளி ,, ரூ. 50.

உள்நாடு தனிப்பிரதி விலை அணு 3.
வெளிநாடு ,, ,, 4.

நமது லக்ஷ்மி ஒவ்வொரு மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும் அந்தந்த மலரின் முதல் ஸஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் இந்தியாவிலுள்ள நேயர்கள் 10 தேதிக்குள்ளும் கப்பல் பிரயாணத்தையுடைய நாடுகளிலுள்ள நேயர்கள் 15-தேதிக்குள்ளும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

எவ் விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லட்டர் எழுதினுலும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

லக்ஷ்மியில் பிரசுரிப்பதற்கு விஷயங்கள் அனுப்ப விரும்பும் நேயர்கள் ஒவ்வொரு மாதம் 15-தேதிக்குள் மையினுல் எழுதி யனுப்ப வேண்டும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினுல் மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மியில் உள்ளூர் விளம்பரங்களும், வெளியூர் விளம்பரங் களும், பிரசுரிக்க எடுத்துக் கொள்ளப்படும். சார்ஜ் விஷயமாக, ஆபீஸுக்கு எழுதியாவது நேரிலாவது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர் :— **லக்ஷ்மி ஆபீஸ்,**
தபால் பெட்டி 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
டெலிபோன் 2692 **மதராஸ்.**

OFFICE OF THE REGISTRA
18 FEB 192

லக்ஷ்மி துதி

உலகம் புரக்கும் பெருமான்றன்
    உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப
    உருவே யெல்லாம் உடையாளே
திலகஞ் செறிவா ணுதற் கரும்பே
    தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே
    தித்தித் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கரு ளளித்த
    வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங் குருவாம்
    வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணை பொழி
    தடங்கட்டி திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரண மிது
    தருணங் கருணை தருவாயே.

3L
N23LA
N27.4.6

பெண்மை.

[சி. சுப்பிரமணிய பாரதியார் பாடியது.]

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்ப நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும்.

அன்பு வாழ்கென்று அமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்.

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்கள் அறமடா
கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோம்.

பெண் ணறத்தினை ஆண் மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா.

நான் மறைகளின் சிறப்பியல்பு

திருவாளர். த. ராமகிருஷ்ணன் அவர்கள்.

(வேதமாணுக்கன்)

மறைகள் ஒவ்வொன்றிலும் எத்தகைய சிறப்பியல்புகள் இருக்கின்றன? எக்காரணம் பற்றித் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன? என் மறைகளுக்கு மிகுந்த மதிப்புக் கொடுக்கப்படுகின்றது? மறைகளொவ்வொன்றிற்கு முள்ள தொடர்பு யாது? இப் பொருட்கள் குறித்து ஈண்டு சிறிது ஆராய்வோம். மறைகளையே பொதுப்படப் பயில்வதற்கு உரிமை நல்கா இக்காலத்து இவ்வுரை பயனிலவாய் முடியுமெனப் பலர் ஆசங்கித்தல் கூடும். மறைகளை அறவே புறக்கணிக்க விரும்புவாரும், தனித்தமிழ் மறைகள் பண்டு நிலவினவென்றுகூறுவாரும் உளரென்பதை உணர்வோம். அஃது தெங்ஙன மாயினு மாகுக. அக் கூற்றுக்களில் யான் புக விரும்பவில்லை. இந்துக்க ளனைவரும் இந்து சமயத்தின் உட்பிரிவினர் பலரும் நான்மறைகளைத் தங்கட்குரிய முதனூலென்று ஒப்புக் கொள்ளுகின்றனர். தமிழகத்தில் தமிழர்களும் தங்களை இந்துக்களென்றும் வேதங்கள் முதனூலென்றும் பகர்கின்றனர். ஆனால் இந்துக்களில் முக்காலே மூன்று வீசம் பங்கும் வேதங்களை அறியார்; கற்றுமிரார். என் மதிப்பாக—கவுரவமாக—இந்துக்களென்றும் வேதங்கள் முதனூலென்றும் கூறிக்கொள்ளல் வேண்டும்? வெட்கம்! வெட்கம்!!

ஓர் மகமதியரை வினவுங்கள்; அவர் உயர்ந்தாராயினும் இழிந்தாராயினும் எந்நிலையி லிருப்பினும் சமமாகத் தங்கள் மறையைக்—குரானை ஆண் பெண் இருபாலாரும்

கற்க உரிமை பெற்றிருக்கின்றன ரல்லவா? ஒரு கிறிஸ்தவ ரைக் கேளுங்கள். எவ் வேறுபாடு மின்றி யாவரு மொப்பா கத் தங்கள் மறையை—பைபிளேக் கற்கின்றன ரல்லவா? என் இந்துக்களெனச் சாற்றிக்கொண்டு தங்கள் மறையைக் கற்கமாட்டாது வாளா கழிப்பதேன்? நீங்கள் மிலேச்ச ரென்று கூறும் பிறநாட்டார்—ஆங்கிலேயர்—ஜெர்மானியர்—அமெரிக்கர் உங்கள் மறைகளை வாசிக்கலாம், உரைகள் வரையலாம், உண்மைகள் உணரலாம். நீங்களேன் பயிலக் கூடாது? வயிற்றுப் பிழைப்பிற்காகப் பிறநாட்டு மொழிக ளெல்லாம் உள்ளத்திற் பதிக்கும் உங்களுக்கு இம்மொழி நுழையாதோ? அறியேம்! அறியேம்!!

தமிழகத்தீர்! ஒரு முறையேனும் போலி மொழி பெயர்ப்புக்களையும் உரைகளையும் அகற்றி நல்லுரைகளோடு வாசித்துணர்ந்து; பின்னர் புறக்கணிமின். எம்மொழியி லாயினும் நன்மொழிகளைப் போற்றுதல் அறிஞர் கடமை யன்றோ? அம்முறை பற்றியேனும் இந்நூலை ஒருமுறை வாசித் துணர்மின். பண்டைப் பேரிலக்கணமாகிய தொல் காப்பியத்திற்கும் முற்பட்டதென அறிஞரால் மதிக்கப் படும் இந்நூலைப் பழமை கருதியேனும் படிமின். அந் நான்மறைகளுள் மும்மறைகளிலும் பயிலப்படும் "தாய் மொழியும் தாய்நாட்டுக் கலைகளும் தாய்நாடும் ஒவ்வொரு வர் உள்ளங்களிலும் குடிகொண் டுறையத் தக்கன. அவற்றை எஞ்ஞான்றும் மறவற்க'! இம்மொழிகள் எளியேன் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தன; ஈர்க்கின்றன.

"யாவரும் கலந்து செல்க, கலந்து மொழிக, தங்கள் உள்ளங்களைத் தூய்மைப் படுத்துக." "யாவர்களுடைய நினைவும், உள்ளமும், அறிவும் ஒன்று படுக," கழகங்களில் செல்வதற்கு யாவர்க்கும் ஒத்த உரிமை நல்குக, யாவர்க் கும் பயிற்சியில் வேறுபாடு கொள்ளற்க, யாவரும் ஒருங்கே உணவு கொள்க" "நம் செயல் ஒத்திருக்க, நம் நெஞ்சம் ஒத்திருக்க, நம் உள்ளம் ஒத்திருக்க, நீவிர் மிகக் கூட்டுறவு

210365
சென்னை 600 008

கொள்க" "நீவிர் அனைவரும் காதலாற் பிணித்து வாழ்க, யாவரும் கலந்து உணவு கொள்க, யாவருங் கலந்து இறைவனை வணங்கிடுக." இத்தகைய பொன்னுரைகள் பல மிளிர்கின்றன. இத்தகைய உரைகள் பலவற்றையும் அறிவுக் கண்ணால் ஆய்ந்தா ரிடையே சாதிப்பூசலும் சமயப்பூசலும் பிறவும் நிகழா வென்பது திண்ணம். தமிழர்கள் எவ்வகையி லேனும் நன்முறை பற்றி நடுநிலையாக மறைகளை ஆராய்தல் வேண்டுமென்பதே எமது பெரு விருப்பம். நிற்க. குறித்த பொருள்பற்றிச் சிறிது புகல்வாம்.

உண்மையில் நான்மறைகளும் கலந்ததே மறைகளெனப்படும்; தலையும் கைகளும் வயிறும் கால்களும் சேர்ந்து உடம்பா மாறும்; ஆன்மாவும் அறிவும் மனமும் பருவுடலுங் கலந்து மகனுமாறும்; இருக்கும் எசுரும் சாமமும் அதர்வமும் ஒன்றுபட்டு 'வேதம்' ஆகின்றது. இவ்வாறாக நான்கு வேதங்களையும் அறிவுக் கண்ணால் ஆராய்வார்க்கு ஒற்றுமை காண்பது அரி தன்று. ஆனால் ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. ஒன்று பிரிதொன்றை நோக்கத் தனிச்சிறப்பு வாய்ந்ததென்பதில் ஐய மில்லை. உடம்பென்றால் எலும்பு தோல் தசை கொழுப்பு குருதி முதலிய பொருட்கள் அடங்கியவை. அன்றியும் கண்களின் தன்மை மூக்கிற் கில்லை, மூக்கினியல்பு காதுகளுக் கில்லை. எனவே ஒவ்வொரு உறுப்புகளுக்கும் தனித்தனியியல்பும் செயலும் பண்புகளு மிருக்கின்றன. யாதேனு மோர் உறுப்பு தன்செயல் நிகழ்த்த இயலாது போயின், உடம்பில் பெருந்துன்பம் விளைகின்றது. அது போலவே, யாதேனுமோர் மறையை மக்கள் கற்காவிடின் மனிதசமூக முன்னேற்றம் தாழ்வடையு மென்பதில் ஐய மில்லை. மறைகளையே உணராதிருக்கும் இக்காலத்து, மக்களின் நிலைமை எத்துணை தாழ்வுற்றிருக்கு மென்பதை அன்பர்கள் சிந்தித்திடுக.

மக்களுக்கு அறிவு உயிர் உள்ளம் உரை யென்னும்

நான்கும் சிறந்தவை. புறக் கரணங்கள் பத்தில் மக்கட் தன்மையைச் சிறப்பாக உணர்த்துவது உரைக் கரணம். உரைக்கரண மில்லாது போயின் மக்கள் ஊமையர்களாகப் பறவை விலங்குகளை யொப்ப இலங்குவர். அகக்கரணங் களில் மனம் சிறந்தது. உயர்வு தாழ்வு, நன்மை தீமை, தகுதி தகுதியின்மைகளை ஆராய்ந்து துணிவது மனத்தின் செயல். இதற்குமேல் உயிர்களனைத்திற்கும் அடிப்படை யாய் நிலவுவது உயிர்நாடி அல்லது பிராணசக்தி. உயிர்ச் சக்தி நிலவுங்காலம் வாழ்க்கையென்றும் நிலவாக் காலம் இறப் பென்றும் கூறப்படும். இதற் கப்பால் ஆன்மாவின் உண் மைச் சக்தி அறிவுருவமாகத் திகழ்கின்றது; ஒளியிடுகின் றது. இவ்வாற்றல் உயிரொடு யாண்டும் உறைகின்றது. இவ்வறிவுச் சக்தி உயிரினின்று எஞ்ஞான்றும் பிரிவதில்லை. மக்களிடத்து இன்னும் பல ஆற்றல்களும் மிளிர்கின்றன; அவற்றை ஈண்டு ஆராய வேண்டுவதில்லை. இந்நான்கு ஆற்றல்களுமே தலைசிறந்தவை. இவற்றின் தலைமையிலேயே பிற சக்திகள் தத்தம் செயல்களை நிகழ்த்துகின்றன. எனவே, இவற்றை வயப்படுத்தலான் பிற ஆற்றல்களனைத் தும் இயல்பாகவே இவற்றுள் அடங்கி விடுகின்றன.

கைகால் முதலிய உறுப்புகள் விலங்கு பறவைகள் போலவே மக்களுக்கு மிருக்கின்றன. அவற்றைக் குறித்து ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. மக்களுக்கு எவ்வகை ஆற் றல்கள் சிறப்புடையனவோ அவையே ஈண்டு குறிக்கப் படுகின்றன. அறிவு உயிர் உள்ளம் உரை யென்னும் நான்கு சக்திகளும் விலங்கு பறவைகளிடத்து நுண்மையாக அமைந்து கிடக்கின்றன. அவற்றால் மக்களைப்போலக் காரியங்கள் நிகழ்த்த இயலவில்லை. அன்றியும் மக்கள் தாமோ அல்லது சமுகமோ உயர்வடையத் தக்கவற்றைச் செய்கின்றனர். அவ்வாறு பிற உயிர்கள் எவற்றானும் இயற்ற முடியவில்லை. எனவே, இந் நால்வகை ஆற்றல் களும் மக்களிடத்துச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்

றன. இந்நான்கு சக்திகளோடு நான்மறைகளும் தொடர்புடையன வென்பதை வேத வுரையாலேயே காண்க:—

(க) ரிசம் வாசம் ப்ரபத்யே—உரையாடற் பொருட்டு இருக்கு வேதத்திற்கு அடைக்கலம்.

(உ) மானோ யஜுः ப்ரபத்யே—உள்ளத்தின் பொருட்டு எசுர் வேதத்திற்கு அடைக்கலம்.

(ங) ஸாம ப்ராணம் ப்ரபத்யே—உயிர்ப்பின் பொருட்டு சாம வேதத்திற்கு அடைக்கலம்.

(ச) சக்ஷுः ச்ரோத்ரம் ப்ரபத்யே—கேள்வித் திறன் அடைதற் பொருட்டு அதர்வ வேதத்திற்கு அடைக்கலம்.

இவ்வாறாக நான்கு வேதங்களுக்கும் அடைக்கலப்படும் குறிப்பு எசுர்வேதம் ஙசு-ம் அத்தியாயம் முதல் மந்திரத்தில் காணப்படுகின்றது. உண்மைச் சாந்தி பெறுதற்கு இதுவே உண்மையான வழி. இம் மந்திரக் கருத்தை நன்கு ஆராய்ந்தால் நான்மறைகளின் சிறப்பியல்பு தாமே விளங்கும்.

க. இருக்கு வேதம் வாய்மொழியைப் புனிதப்படுத்துவது. இருக்குவேத மந்திரக் கூட்டத்திற்கு சூக்தமென்று பெயர். (சு) நன் (உக்த) மொழி, சு + உக்த (சூக்த) நன் மொழி, நன் நினைவு, நற்சிந்தனை, நற்பேச்சு, (Holy Thought) நல்லெண்ணங்களின் தொகுதிக்கு இருக்குவேதமென்று கூறப்படும். நல்லெண்ணத்தால் சொல் தூய்மைப்படுகின்றது. தீய எண்ணங்களை யொழித்து நல்லெண்ணங்கள் தோன்றச் செய்யும் பேரியல்பு இருக்குவேதத்திற் குரியது. இருக்கு மறைப் பயிற்சியால் மக்களுக்குத் தூயநினைவும் தூயமொழியும் எழுகின்றன.

உ. யசுர் வேதம் மனதைத் தூய்மைப் படுத்துவது. யசுர்வேத மந்திரத் தொகுதிக்கு அத்தியாய மென்று பெயர். அத்யாயம் அத்யயனம் அப்யாஸம் என்பன ஓதல் கற்றல் பயிலுதல் (Study) என்னும் பொருள் பயப்ப மனத்தி னடியாக நிகழ்த்தற் குரியது. இம் மனம் நனவில் யாண்டும் ஒன்றைவிட் டொன்றைப் பற்றிக்கொண்டே யிருக்கின்றது. எனவே இதனை நற்செயல்களோடு கலந்து தூய்மைப் படுத்துவது யசுர் வேதத்தி னியல்பு. தூய செயல்களால் உள்ளத்தைப் புனிதப் படுத்துவது யசுர் வேதப் பயிற்சியால் பெறப்படும்.

ங. சாம வேதம் உயிர்ப்புச் சக்தியோடுறையும் விகார மற்ற அகக்கரணத்தின் உயரிய ஆற்றலைப் புனிதப் படுத்து வது. முற்கூறிய மனம் நனவில் செயல்களைக் கற்பித்தும் வேறுபடுத்தியும் இயங்குகின்றது. அம் மனத்தின் தூய்மை நற் செயல்களில் ஆழ்ந்திருத்தலாகிய யசுர் வேதத்தால் பெறப்படுகின்றது. ஆனால் அதனினும் நுண்ணிய மாண் புடைய மாறுபாடில்லாக் கற்பனை சக்தி மக்க ளகத்து நிலவு கின்றது. அக்கற்பனையும் வேறுபாடும் தருக்கம்—குதருக் கம்—விதருக்கங்களால் பெறப்படுவ தன்று. உள்ளமும் உயிர்ப்பும் ஒன்றுபட்டு மாறுபாடில்லா உணர்வுடன் கலந்து மக்களகத்து மாண்பெரும் ஆற்றலை எழுப்புகின்றது. இத் தகைத் தூய்மை சாமவேதப் பயிற்சியால் வழிபாட்டி னடியாகப் பெறப்படுகின்றது. சாமவேத மந்திரத் தொகு திக்கு 'சாமன்' என்று பெயர். மனத்தோற்றங்களுக்கு அமைதி யளிப்பதென்பது பொரு ளாகும்.

ச. அதர்வ வேதம் மெய்யுணர்வால் அறிவையும் ஆன்மாவையும் புனிதப்படுத்துவது. செவிப்புலன் வழி யாகக் குருவினிடமிருந்து கேட்கப்படும் அறிவு புத்தியோடு கலந்து ; ஆண்டு புத்தி புனித மடைகின்றது. அதர்வவேத மந்திரத் தொகுதிக்குப் 'பிரஹ்ம' (அறிவு) என்று கூறப்

படும். எனவே அதர்வ வேதத்தைப் பிரஹ்ம வேதமென்றும் பகர்வர்.

மக்கள் மேன்மை யடைதற் பொருட்டே இந் நான்மறைகளும் நால்வகைச் சிறப்பியல்புகளால் உயர்வுபெற்று மிளிர்கின்றன. யோகிகள் உயிர்ப்பும் அறிவுந் தூய்மை யுறுவதால் மாண்புமிக்க ஆற்றல்களை அடைகின்றனர். சாதாரண மக்கள் சொல்லும் மனமும் தூய்மை யுறுவதால், ஒரு வகையான உயர்திறமை படைக்கின்றனர். மக்கள் மேற் கூறிய நான்கு திறமைகளையும் சமமாக வளர்ப்பரேல் நான்மறைகளின் உயர்வு புலனும். நான்மறைகளிலும் யாதேனுமொன்று பயிலப்படாது போயின் எத்தகைக் குறை வுண்டா மென்பது மேல் விவரங்களால் உணரப்படும்.

நான்மறைகளைக் கற்கவும் கற்பிக்கவும், கேட்கவும், கேட்பிக்கவும் வேண்டுவது ஒவ்வொரு இந்துவுக்கும் இக் காரணம் பற்றிச் சிறந்த கடமையாகின்றது. பயிலாதவர்களும், பயில்வதற்கும் பயில்விப்பதற்கும் எளிய முறையை அமைக்காதவர்களும் தங்கள் கடமைகளினின்று வழுவியவராவர். ஒவ்வொரு இந்துவும் தமது சொல்லாற்றலை இருக்கு வேத மந்திரப் பயிற்சியாலும் ஆராய்வாலும் தூய்மைப் படுத்தவேண்டும். தமது உள்ளத் தூய்மை யசுர்வேத மந்திரங்களை ஓதுவதாலும், அவற்றிற் கூறிய செயல்களைச் செய்கையில் கொணர்வதாலும் பெறவேண்டும். தமது உயிர்ச் சக்தியின் திருத்தம் சாமவேத மந்திரங்களைப் பாடுவதாலும் இறை முதற்பொருளை வழிபடுவதாலும் அடைய வேண்டும். தமது ஆன்ம உயர்வு அதர்வவேத மந்திரங்களைப் பயில்வதாலும் ஆன்ம விருத்திகளைக் கட்டுப்படுவதாலும் தேடுதல் வேண்டும். இவ்வகையாக மக்கள் பெருமையும் மாண்பும் படைத்துச் சமுகத்திற்கு உயர்வும் புகழும் ஓங்குவித்தல் வேண்டும். இவைகளே நான்மறைகளால் பெறப்படும் சிறப் பியல்புகளாம்.

மறு மணம்

ஒரே கனவிடை இரு காட்சி

(ஸ்ரீகாசி. V. கண்ணம்மாள் எழுதியது.)

(முதற் பாகம்.)

உயர்தகை உய்வான் தன்னுயிர் அடுத்தே
துயரிடைத் தொடரும் வினவைத் தூக்கின்
இருப்பதோ? இறப்பதோ? எனவே முடிவுற,
இருப்பதே சரியென மிகுதியும் எண்ணுவர்.
இல்லாள் இழந்தவென் எளிய நிலையில்,
நல்லவை எதுவென நாடிய எண்ணமில்,
பயன்பட மணப்பது பழிபடு மணமோ?
நயம்பட நிகழ்ப நாளிடை எதுவோ?
அயலார் அறைவதை ஆய்ந்த முறைதனில்,
பயமறப் பகுத்துப் பார்த்தே மணப்பேன்,
பயமறப் பகர்ந்து பழியற மறுப்பேன்,
என்னு மறுவினு இறுகவே மறுவினே.
துன்பம் அகற்ற இன்பம் அணுக,
அன்பின் மரபில் ஒங்குமிவ் அவாவை
உன்னி ஒருவழி உவந்துநான் ஒதுக்க,
வளைந்ததோர் வரையுள் வகிர்ந்து சென்று,
தளைத்ததோர் சோலையுள் தளர்ந்து தங்கினேன்,
தனித்த என்னிலை இயலணங்கைத் தழுவ,
இனித்தே இவளும் என்முன் பூத்தனள்,
பூத்த புதுமையின் பொலிவு புலன்பட,
எத்தித் துதிக்கும் எல்லும் எழுந்தது,
கவலையின் கங்குல் கதிர்படக் கறைந்தது,
திவலைபோல் பனியின் திருவுரு இயலெனும்,
அணங்கின் அங்கமின் முத்தென அமையும்,
கணமதில் காட்சி கண்முன் களிக்கவே,
துணையிலாத் தனிமையுட் துடிக்குமென் மனமும்
மணந்தது ஒதுங்கே வான்விழி மடந்தையைத்
தனக்கே எதுவுமில் தன்னுயிர் உடலெலாம்,
எனக்கே என்ற இயலெனும் அணங்கின்,
நிறையே விழிமுன் நிறைய மனமும்,

மறந்தது மருவிய மணமெனும் வினாவை,
அன்னொடி,
அடுத்த அடவியில் அழுகைதான் கேட்டேன்,
இடித்துளம் இயம்பும் இரங்கிய குரலால்,
படித்துப் படித்து பகர்வ செவிபுக,
தடித்த மனமும் தளர்வுறக் கண்டு,
மடித்தகால் மண்ணுள் மடியப் படுக்கவே
ஒடிந்த வோசையில் உடலது உய்வுற
துடித்து வருமோர் தோகையைக் கண்டேன்;
மூடிய முகவணி முதிர்ந்த வனப்பை

நாடிய நோயிலும் நனிபடக் காட்டும்,
தேடியே தீண்டும் தீமையும் தீர்த்தில,
ஆடிக் களிக்கும் அழகின் இளமையை,
மையிலா விழியில் மாரி மல்கவே,
தையல் வாயிடைத் தாபம் உயிர்த்தது,
கேட்டை சகியா சிறுமியின் கேதம்
கேட்ட அளவில் கேள்மின் வேதியர்காள்!
ஆற்றாத் துயரை அகத்திடை அடக்கின்
ஆற்றதை அடுத்த அகடுபோல் அதிருமே!
மாற்ற முயலின் மனந்தான் முறியுமே!

ஊன்றின் பெருக்குழி உலகும் கடப்பேன்!
தூற்றும் பழியறத் துறப்பது நலனே!
கூற்றுவன் கொள்ளுமுன் கொடுப்பேன் உயிரை!
உயிர்க்கக் காதலன்! உயிரிழக் காதலன்!
பயிர்கொள ஆதவன்! பயிரற ஆதவன்!
ஆதவன் போலவே காதலன் என்பால்!
மாதவன் புரிந்தேன் மாழுமிக் கதிக்கே!
போகாப் பொதியைப் போக்கும் இப்புனல்!
ஆகாச் சதிவழிக் காளாய் ஆதரிக்கும்!.
ஏகமாய்ப் போனவரை வேகமாய்ப் பற்றும்!

ஏசுவார் முன்னர் எழில்பெற விணைக்கும்!
மறையோர் விதிக்கும் மயிர்கழி வழியில்,
இறையோன் திறைபோல் ஏற்பது தக்கிணை;
கறைபடு தொழில்பலக் கண்படத் தொடுத்து,
மறைபிற எத்துறை பிறள, மதிக்கும்

முறைதான் பிறள முதலாம், மற்றும்
சிறைபடச் சிகையற சீரது சிதறவே
நிறையறச் சிறுமிகள் நொந்து நெளிவுற
மறைபடு நெறியென மறையாப் பாங்கில்
அறைபடு வேத்த தந்தணர்பால் அதுவும்,

நறைபடத் தவமெனும் நகரெலாம் துலங்கின்,
அவர்தாம் அளித்த அரும்பொருள் ஈயேன்,
எவர்க்கும் ஈயேன், இவர்க்கோ ஈவேன்!
இவர்சொல் விளக்குப எத்துநூல் வேதமாம்!
இவரோ வேள்வியர்! இவரோ கேள்வியர்!
இவரது மொழியால் இருமனை பாழாம்!
இவரே விதிப்பர் இருவிதி ஓரினத்தே!
தவறும் பதியிழந்து தாரம் மணப்பின்!
இவருடல் இடுகளத்தே! அவருயிர் மணக்களத்தே!
பிணக்கலம் அவிழுமுன் மணக்கலம் பூண்பார்

கணக்கிலா கொலைதான் கருதாப் புரிந்து
கணக்கிலாப் பெருக்குவர் கரைகாணும் வேதியர்!
பிணக்கே யென்பார் பெண்ணிலார்!
ஆதலால்,
வேதம் பொய்ப்பது வேதியர் முறையால்!
கேதம் பெருக்கும் கேள்வியர் இவரே!
சேதம் எவர்க்கு? செழுங்கிளை யவர்க்கே!
விண்ணும் மண்ணும் விலகி நிற்பபோல்,
எண்ணும் இவரெண்ணம் விண்வழி எட்டா!
பண்ணும் பாவம் பகரப் படுமோ!

திண்ணம் திண்ணம் தீண்டு எம்வசை!
உண்ணும் ஊனிற்கே ஊரூர் ஓடுவர்''
உடலும் உயிரும் ஒன்றின் அதுவுயிர்
உடலிற் பகுதி உயிரே யாகும்;
உடல்யான் உயிரவர் இரண்டும் ஒன்றே,
உடலது நீங்குமுன் உயிரது நீங்கும்,
உடல்பெறு உயிர்க்கு ஒருநிலை இலவாம்,
உடலை உயிருடன் ஒதுக்கநான் மூழ்கின்,
இடர்மிகிவ் வாழ்வின் இழிவும் விலகுமே,
அப்போ தக்கினி ஆதரித் தாங்கே,

இப்போது வினையுடல் நீக்கு மிப்புனல்,
தப்பாது கணவரை நான்பெறத் தருமே,
செப்பும் வசையறச் சதியே சீர்தரும்,
சென்றவர் குறியெனச் சிறப்புடன் தாங்கிய
மன்றலின் மணியெலாம் மடுவுள் வீழ்த்தினள்
வீழ்த்திய வைப்பினுள் விலையற நின்றது
ஆழ்ந்திய அன்பினில் அரும்பொருள் அவரெழுத்தே
மதுவும் இனிப்பற மாற்றுமிக் கடிதம்
இதுவே இவரது படமென எடுத்து
மெதுவாய் மாரிடை மருவ விடுத்து

இதுவோ என்கதி! இதுவோ என்கதி!
என்றவள் அதனை எவ்விடம் எறிந்தது!
சென்றதன் பின்னே செடிதியிற் சென்றனள்!
ஆதலின்,
மன்றல் நன்றோ? அன்றோ? என்பதை
இன்றே காண்மின்! இங்கே காண்மின்!
குன்றெனும் நெஞ்சம் குன்றுமிக் கொலையுட்!
தொன்று தொட்ட கொடுமை தோன்றுமே!
பதுமம் தந்த பரமன் புதல்வரே!
பொதுவாய்ப் பகரும் வேதப் புகலிடமே;

அதுலன் அறிவே வடிவுறு மந்தணரே!
எதுவும் முன்னறி இயல்பில் இயற்றுவாய்!
வதுவின் விதியை விலக்கும் வலியுடையோய்!
இதுவோ என்கதி? என்ற இம் மொழியுட்,
ததும்பும் எதிரொலி தளரா முன்னர்,
சதுரரே! சதியெனும் யிக்கொலை தடுப்பாய்!
தடுக்கா விடிலோ அடுக்கும் தாபம்,
தொடுத்துத் தொடுத்துத் தொலைக்கும் தொல்குலம்!
தடுத்தல் நன்றே! தடுத்தல் நன்றே!
என்றவனும்,
மடுவுட் தாழ்ந்தனன் மடந்தை பின்னரே.

(இக் கனவின் மறு பாகம் பின் அங்கத்தில் வரும்.)

செல்வச் சிறுமியர் களிப்பு

(ஸ்ரீமான் எஸ். தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் எழுதியது.)

கும்மி.

(1) பாகமாகச் செய்த பண்ட முண்போம்—நன்றாய்ப்
பக்குவம் வந்த பழங்க ளுண்போம்
தாகமானால் பல பானகமும்—தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம்.

(2) காலத்துக் கேற்ற உடை யணிவோம்—வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
கூந்தலிற் சூட்டி யழகு செய்வோம்.

(3) பந்துக ளாடிப் பழகிடுவோம்—கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம்—சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம்.

(4) ஓடி யொளித்துக் களித்திடுவோம்—நாங்கள்
ஒற்றை யிரட்டையும் வைத்திடுவோம்
நாடியே வட்டுக ளாடிடுவோம்—தோழி
நாணக்கண் பொத்தி நகைத்திடுவோம்.

(5) உன்னியெழு மூஞ்ச லாடிடுவோம்—கேட்போர்
உள்ளம் குளிரவே பாடிடுவோம்
சின்னஞ் சிறு வீடு கட்டிடுவோம்—அதில்
சித்திர வேலைகள் செய்திடுவோம்.

(6) பத்துப் பசுக்களெம் வீட்டி லுண்டு—நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம்—இந்த
நீணிலத் தெம்மை யொப்பாரு முண்டோ ?

II

ஏழைச் சிறுமியர் முறை பாடு

(1) நல்ல பண்டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆறவழி யின்றி வாடிடுவோம்.

(2) அன்னப்பால் காணாத ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்கு மம்மா ?
என்னப்பா ! யாம்படும் பாட்டை யெல்லாம்—சென்று
யாரிடம் சொல்லி அழுவோம் அம்மா !

(3) இட்டலி ஐந்தாறு தின்றோ மென்பீர்—நீங்கள்
ஏதும் கருணை யிலீரோ அம்மா ?
பட்டினியாக இறந்திடினும் நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோ மம்மா.

(4) தேயிலை தேயிலை என்பீ ரம்மா—இது
தேக்கிலை தானோ தெரியா தம்மா,
வாயும் வயிறும் நிறைந்திடுமோ—இதில்
வைத்த அமுதும் திகைந்திடுமோ ?

(5) காப்பி காப்பி யென்று கத்துவீரே—அதைக்
கண்ணாலே கண்டது மில்லையம்மா,
சாப்பிடற் கேற்ற உணவிதுவே—அன்றிச்
சட்டையோ தொப்பியோ கூறும் அம்மா ?

(6) ஆனைக் கொம்பன் சாதம் உண்டோ மென்பீர்—இதை
ஆரே உலகினில் நம்பிடுவார் ?
தேனைப் பழித்த மொழியுடையீர் ! எம்மைத்
தேராத பித்த ரென்றெண்ணி னீரோ ?

(7) சோப்புச் சோப்பென்று புகழ்ந்திடுவீர்—அது
சுட்டுக் கடிக்கும் கிழங்கதுவோ ?
காப்புக்கை வீசி நடப்பவரே ! அதன்
காரியம் சற்றே உரைப்பீரோ ?

(8) ஆனி யாடி மாதக் கொந்தலிலே—மந்தை
ஆடுகள் போலக் கொடுகி நிற்போம்
வேனிலில் வெந்துடல் வேர்த்திடவே—வெயில்
வேளை அலைந்து திரிந்திடுவோம்.

(9) சுற்றிய கந்தை ஒரு முழமாம்—அதில்
தோன்றிய பீறலும் ஆயிரமாம்
பற்றும் அழுக்கினைப் போக்க வென்றால்—உடை
பஞ்சு பஞ்சாகப் பறக்கும் அம்மா.

(10) புண்ணும் சிரங்கும் நிறைந்த தம்மா—அதில்
போட மருந்தும் கிடையாதம்மா
கண்ணில் உறக்கமும் இல்லையம்மா—எங்கள்
கஷ்டம் அறிப வருண்டோ அம்மா ?

(11) ஈரோடு பேனுக் கிடமாச்சு—கூந்தல்
ஈச்சஞ் செடியது போலாச்சு
வாரி முடிப்பது மில்லையம்மா—எண்ணெய்
மாத மூன்ருக அறியா தம்மா.

தாய்நாட்டின் மாற்ருர்

திருவாளர். த. ராமகிருஷ்ணன் அவர்கள்.

யொநொ த்வேஷத் ப்ருதிவி ய: ப்ருதந்யாத்
யொஅஹ்பி தாஸாந் மநஸா யொ வஹ்தேந
தம்நொ பூமெ ரந்ஹ்தய பூர்வக்ருத்வரி.

அதர்வவேதம். Xii. i. 14.

தாய்நாடே! யாவர் நம்மை (த்வேஷத்) பகைக்கின்றனர். (ய: ப்ருதந்யாத்) யாவர் நம்மீது சேனைகளால் தாக்குகின்றனர். யாவர் மனத்தில் (அஹ்பி தாஸாத்) நம்மை அடிமைகளாக்கத் துணிகின்றனர். யாவர் நம்மைக் கொல்வதற்கு முயற்சிக்கின்றனர். (பூர்வக்ருத்வரி பூமெ) வியத்தகு உரனும் ஊக்கமும் நல்கும் தாய்நாடே! நீ அன்னரை (ரந்ஹ்தய) மாய்த்திடுக.

தாய்நாட்டின் மாற்ருராவார் தேச நன்மக்களை-நாட்டுப் பற்றுடையாரைப் பகைக்கின்றனர். அவர்கள்மீது சேனைகளை யேவி எதிர்த்துத் தாக்குகின்றனர். அவர்களை அடிமைகளாக்க மனத்தின்கண் பல்வகைச் சூழ்ச்சிகளும் புரிந்து சோதிக்கின்றனர். பல்வகைப் படைகளாலும் அவர்களைக் கொலைபுரிகின்றனர். அத்தகைய மாற்ருரை அழிக்க வேண்டுவது யாவர்க்கும் கடமையாகும்.

வெண்ணிலா.

(ஸ்ரீமான் எஸ். தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடியது.)

[நித்திய அநுபவத்திலும், நூதன சாஸ்திரங்களிலும், கர்ண பரம்பரையான கதைகளிலுமிருந்து சந்திரனைப் பற்றி வெளியாகும் சில விஷயங்களை மட்டும் ஆதாரமாகக்கொண்டு இக்கண்ணிகள் எழுதப்பட்டிருக்கின்றன.]

கண்ணிகள்.

(1) மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே—ஒரு
வெள்ளி யோடம் போல வரும் வெண்ணிலாவே.

(2) பாநு வெங்கதிர் குளிக்கும் வெண்ணிலாவே—நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே.

(3) ஆம்பல் களி கூரவரும் வெண்ணிலாவே—உனக்
கம்புஜம் செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே.

(4) இரவையும் நண் பகலாக்கும் வெண்ணிலாவே—உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே.

(5) வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே—மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ வெண்ணிலாவே.

(6) கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே—பகல்
கூட்டினி லுறங்குவாயோ வெண்ணிலாவே.

(7) பந்தடிப்போ முன்னை யென்று வெண்ணிலாவே—நீயும்
பாரில் வர அஞ்சினையோ வெண்ணிலாவே.

(8) பளிங்குபோலு முன்னுருவில் வெண்ணிலாவே—கறை
பற்றியே யிருப்பதேனோ வெண்ணிலாவே.

(9) பூமியின் உரு நிழலோ வெண்ணிலாவே—அது
போகாக் குறு முயலோ வெண்ணிலாவே.

(10) குன்றும் குகைகளுமோ வெண்ணிலாவே—அன்றிக்
கூனக் கிழவிதானோ வெண்ணிலாவே.

(11) ஆழியும் நீ வரக்கண்டு வெண்ணிலாவே—குதித்
தாடுவதெக் காரணமோ வெண்ணிலாவே.

(12) ஆதாரம் ஒன்றில்லாமல் வெண்ணிலாவே—நீயும்
அந்தரத்தில் நிற்பதெங்ஙன் வெண்ணிலாவே.

(13) சுற்றித் திரிவது மேன் வெண்ணிலாவே—உனக்குச்
சொந்த இடம் ஒன்றில்லையோ வெண்ணிலாவே.

(14) அண்டிவாராய் நீ யெனினும் வெண்ணிலாவே—இன்னும்
அகன்றெங்கும் போய் விடாதே வெண்ணிலாவே.

(15) பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே—உன்றன்
பக்கம் வந்து சேருவனே வெண்ணிலாவே.

(16) பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே—என்றன்
பாங்கில் விளையாட வாராய் வெண்ணிலாவே.

(17) பாங்கில் விளையாட வந்தால் வெண்ணிலாவே—நல்ல
பால் தருவேன் பழந் தருவேன் வெண்ணிலாவே.

வழி பறிக்காரராம் வால்மீகர்

மதுரை—எஸ். ஜி. இராமலிங்க அய்யர் எழுதியது.

பண்டைக் காலத்தில், ஒரு சிற்றூரில் பார்ப்பனன் ஒருவன் தீயோர்களின் பரஸ்பர சகவாஸத்தால், ஓர் அந்நியகுல மங்கையை மணந்து இல்லறமினிது நடத்துவானானன். அங்ஙனம் ஒழுகுங்காலை, அவனுக்கு எண்ணிறந்த குழந்தைகள் உண்டாகவே, அவர்களைச் சரிவர சம்ரட்சிக்க மாட்டாதவனாய் மயங்கினான். தன் சுய மரபினரை விடுத்து, இதர மரபினரை அடுத்து வாழ்ந்து வந்ததால், அவனுக்கு முன்னைய அந்தணர் ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் பயன்படா வண்ணம், அவற்றை அநுட்டியா தொழிந்தான். வயிற்றுக்கு வழி யுணராது தத்தளித்த அப் பிராமணன், வழிப் பறிக்காரர்களோடு கூடிப் பிரயாணிகளை அடித்து, ஆடை ஆபரணங்களை அபகரித்துக் கொள்ளும் உத்தியோகத்தில் அமர்ந்தனன்.

அந்த அநியாயத் தொழிலில் இறங்கியவன் அடைந்த ஊதியத்திற்கு அறி குறி, அவனுக்கு அன்றாடம் கிடைத்த அபாரமான கொள்ளைப் பொருளே யாம். வழிப்போக்கர்

களை உதைத்தும், வதைத்தும், பிடித்தும், அடித்தும் அங்கங்களை ஒடித்தும், சிரசை வெட்டியும், அவருடைய உயிரைக் குடித்தும், இவ்விதம் தன் வேலையை முடித்தும் வருபவனாகிய அவ் வந்தணன், ஒருநாள், பிரயாணிகள் அகப்படாது போகவும், தனியே ஒரு கனி மரத்தடியின் நிழலில், கால் நீட்டி உட்கார்ந்த வண்ணம், கதிரோன் கடு வெயிலைக் கண்ணுறும் போழ்து, தனக்கெதிரே கண்ணுக்கெட்டாத் தூரத்தில், யாரோ மனிதர்கள் தன்னை நோக்கி நடந்து வருவதாகக் கண்டு, மகிழ்ச்சியும், மன வெழுச்சியும் மட்டுக் கடங்காத வாறு மனதிற் பொங்க, நிரம்பவும் ஆவலோடு பார்ப்பானாயினன்.

தன் குடும்பத்துக்கு அன்றைய தினம் உணவு கிடைக்காமற் போகுமோ வென்று வருந்திய அவ் வேதியன் கண்ணில் பிரயாணிகள் பட்டதால் அவன் உள்ளம் பூர்ண சந்திரோதயத்தைக் கண்ட சமுத்திரம் பொங்குவதை ஒத்தது. அவர்களை அண்மி, அடிமேல் அடி கொடுத்து, வழி பறித்து, கால் கை முறித்துத் தள்ளிவிட்டுப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு, அவர்களைக் கொன்று அப்பிணங்களைப் புதைத்து விடலாமென்று எண்ண மிட்டவனாய் நிற்க, அம்மனிதர்கள் அவனை நெருங்கி வந்து சேர்ந்தனர். காவிகாம்பர தண்டு கமண்டலந் தரித்தவர்களாயும், காதில் குண்டல மணிந்தவர்களாயும், திருநீறு பூசிய சரீரத்தை உடையவர்களாயும் இருந்த அப்புண்ணிய புருஷர்கள் நண்ணலும், கண்குளிரப் பார்த்த அவ்வந்தணன் தன் வேலையை முடிக்கக் கருதுவானாயினன். முக்காலமும் உணரும், அக்காட்டகத்தே தோன்றிய அம்முனிவர்கள், அவன் மனத்தில் உன்னியதை முன்னாடியே நன்கு தெரிந்து, அவனை நல்வழிப்படுத்த நாட்டங் கொண்டவர்களாய் அவனை ஏற இறங்கப் பார்வை யிட்டு அன்பாகவும், பிரேமை யாகவும் வார்த்தையாடத் தொடங்கினார்கள். "உத்தம குலத்தி லுதித்த சத்தியந் தவறாத சற்குண சம்பன்னா! யாம் வினவுதற்கு நீ மறுமொழி தருவாய். பிறந்தது பிராமண குலம்; பின்பு மாற்றிக்கொண்டது சூத்திர குல மல்லவா? என் உனக்கு இக்கதி நேர்ந்தது?" என்று யாவரும் அவனை விளித்துக் கேட்க, அவன், "நீங்கள் மனிதர்களா யிருந்தா லென்ன? அல்லது முனிவர்களா யிருந்தா லென்ன; எல்லாம் எனக்கு ஒன்றுதான். இவ்

வடவியில் நடமாடும் சடாமுடி தாராா யிருக்கிற நீங்கள், துடி துடித்திட உயிர்க் கொலை முடித்திடும் என்னிடத்தில் இவ்வடாத கேள்வியை வினவுதல் தகுமென்று பார்த்தீர்கள் போலும்! இதோ அடுத்த வினடியில் உம் முயிர் விடுபடப் போகின்றது; பாருங்கள்" என்று ஆத்திரமும் கோபமும் காட்டிய வண்ணம் பரபரப்பாகவும், உரக்கவும் பகன்றான்.

அதைக்கேட்ட முனி சிரேஷ்டர்கள் சிறிது மஞ்சாத நெஞ்சத்தினர்களாய், நஞ்சினைப் பழித்த அப் பார்ப்பனனை மீண்டும் பார்த்து, "ஆ! கொலை பாதகனே! யாம் கூறு வதைக் கேள். பற்பல தீங்கையு மிழைத்து வயிறு பிழைத் துழலும் மானிட வாழ்வினைத் தாழ்வெனக் கருதி, வெறுத்த வர்கள் யாம் என்பதற்கு நாங்கள் தரித்துள்ள தண்டு கமண் டலாதிகளே தக்க சாட்சிய மாகும். வழிப்பிராணிகளை அழி த்து, அப்பெரும் பாவப் பழியை நீ சுமத்திக் கொள்கிறாயே! நீ இறப்பின் படுகுழியாகிய கடு நரகில் விழுவாய்! அதற்கு நீ அடிபிடி சண்டை தடபுடலாய் நடத்தித் தப்பித்துக் கொள்ள இயலுமா? மண்ணில் பிறப்பது மானத்திற்காக வும், தானத்திற்காகவு மன்றி வேறல்லவென்பதை அடியோடு மறந்தா போனாய்? இன்னும் இப்பாவம் உன்னைமட்டுஞ் சாருகிறது; வீட்டிலிருந்து தாட்டியமாகக் குழந்தைகட்குப் பாலூட்டி வரும் உன் மனையாட்டிக்கு இது ஒருக்காலும் சேருகிற தில்லை. சந்தேகமானால், நீ கேட்டு விசாரித்துவா; பிறகு உனக்குப் பாப விமோசனத்திற்கு உண்டான விதியைக் கூறுவோம். அதன்படி செய்யின், நீ மோக்ஷ சாம்பிராச்சி யத்தை அடையலாம்" என்று மிக மிக நயமாகவும் பயமாக வும் உத்தமர்கள் கூறி நிற்க, அம்மறையோன் "பாபம்" என்ற மொழியைக் கேட்டவுடனே, அவர்களுடைய வசனத் தில் ஈடுபட்டுருகிய மனத்தனாய், தான் அப் பாபத் துறை யிற் பழகியதற்காகச் சற்றிரங்கினான். ஆனாலும், அப்பாவம் தன் மனைவிக்குமோர் பங்கு, ஏன் போய்ச் சேராதென்று ஏக்கமும் பீதியும் தோற்றுவித்த முகத்தோடும், பாவம் தன்னையே கப்பிக்கொள்ளப் போகிறதேவென்ற கோபத் தோடும் கனவருத்த முற்றுச் சற்று தணித்த குரலில் "ஆகா! அப்படியா! நான் இதுவரையில், பாவம் மனைவி புருஷ னுக்கு ஆளுக்குப் பாதியாக வருமென்றல்லவா நினைத்திருந் தேன்! ஐயோ! நான் என்ன செய்வேன். இதை விலக்கிக்

கொள்ள ஏதாவது விதி ஏற்படவில்லையா? அஃது இருக்கட்டும்; முதலில் என் மனைக்கிழத்தியிடம் இதை வினவி விட்டு விடைபெற்று அருகில் வந்துவிடுகிறேன். தயைகூர்ந்து நான் வருமளவு திருவருள் புரியுங்கள்; சீக்கிரமாய்ப் போய் வருகிறேன்" என்று சாற்றியபடி அவ்விட மகன்று ஓட்டமும் நடையுமாகத் தன் அகத்தை நாடி, தன் தாரத்தின் முகத்தைத் தேடி, அவளைக் கண்டு அவ்விஷயத்தைப் பற்றிக் கேட்க, அவள், "அடாடா! இதுவுமா நான் சொல்ல வேண்டும்? பாவ சமாசாரம் இப்போதுதான் கேட்கிறீர்கள். அதுதான் புத்திசாலித் தனம்; நல்லெண்ணம் உதிக்கும் நல்ல நாள் இதுவே. என்னை மணந்துகொண்ட நீர் என்னையும் குழந்தைகளையும் ரட்சிக்கும்பொருட்டுப் பொருள் சம்பாதிக்க வேண்டியது உம்முடைய கடமை. நீர் கைக்கொள்ளும் தொழில் பாதகமாயும்பாவமாயுமிருந்தால், அதற்குஒன்றும் அறியாதவளும், உமக்குப் பாரியுமாகிய நானு உத்தரவாதி? எல்லாப் பாவங்களும் உம்மையே சேருகிறது; அடைந்த பொருளால் வரும் போஷணைமட்டும் என்னைச் சேருகிறது" என்ற மறுமொழியைக் கேட்ட மறையோன், மஹான்கள் தங்கிய இடத்தில் ஓடோடிச் சென்று, அவர்களைக் கண்ணுறலும், தன் கரத்திலிருந்த அம்பையும் வில்லையும் பிற அனைத்தையும் வெறுத்து எறிந்துவிட்டான்.

பின் அவன் கைகூப்பி வாய் புதைத்துக் கண்ணுங் கண்ணீருமாகக் கரைந்து உருகிக் கலுழ்ந்தனாய், தவ சிரேஷ்டராம் நவமணிகளை நோக்கி, "என் பாவத்தைத் தீர்க்க வந்த திடமன தீரர்களே! இருள் மயமான இந்நிலத்தில் அருள் பொருள் யாவையும் அருளவல்ல அருணனைபோல, என் முன் அவதரித்தவரே! இனி எனக்கு நீரே கதி யன்றி, வேறொருவரு மில்லை. என் மனைவியின் முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டுத் தழுவும் இழுக்கும் அழுக்கு முற்ற வாழ்வை விடுத்தேன்; அவளுடைய முகத்தை ஏறெடுத்துப் பாராது இல்லறந் துறந்து, கானகமே எனது வாசஸ்தல மாகவும், ககனமே எனது உயிர்த் துணையாகவும் கொண்டு ஆரண்ய வாசியாக மாறி அளவற்ற ஆனந்தமும், பூரிப்பும் அடையின் புண்ணியம் நண்ணுமென்று எண்ணுகிறேன்" என்று கூறிய வண்ணம், அவர்களுடைய எதிர் மொழியை அதிக ஆவலோடு எதிர் பார்த்தவனா யிருந்தனன்.

தம்முடைய மொழியில் பூரண நம்பிக்கையும் சிரத்தையும் வைத்துவிட்டதை நினைத்த அந்த மக ரிஷிகள் பின்பு கூறத் தொடங்கி, "அந்தண! இனிமேல் யாம் உபதேசிக்கும் இம் மந்திரத்தை உச்சாடனஞ் செய்துகொண்டும், பகவத் நாமத்தை மனதில் தியானித்துக்கொண்டும் இருப்பாயாகில், உன்னுடைய பாவ மூட்டை கரைந்து முற்றிலும் ஒழிந்து, சொர்க்கலோகத்தை யடையத் தக்க கிடைத்தற்கரிய பெரும்பாக்கியம் உன்னைச் சேரும்; ஆகையால் இதோ இந்த மந்திரத்தை மனனஞ் செய்துகொள்" என்று அவன் காதில் ராமதாரக மந்திரத்தை மரா என மாற்றி உபதேசித்துவிட்டு "இதையே நீ ஜபித்துக்கொண்டிருக்க வேண்டும்; புண்ணியம் லபிக்கப்போகிறது. நாங்கள் சொன்னவற்றைப் பூராவும் மனத்தி லிருத்திக்கொள்; மறக்காதே; நாம் போய் மறுபடியும் வருமளவும் பாராயணஞ் செய்துகொண்டு இரு" என்று உத்தரவு பிறப்பித்துவிட்டு, அடுத்த நொடியில் அவ்விடத்தைவிட்டு அகன்றனர்.

முனிவர்களின் வார்த்தையில் முழு நம்பிக்கை செலுத்திய வேதியன் அதில் மிகுந்த சிரத்தைகொண்டு ஏகாந்தமான இடமொன்றை நாடி, அங்கே அமர்ந்து ஜபம் புரியத் தொடங்கினான். மரா மரா என்ற மந்திரத்தை மட்டும் விட்டுவிடாமல் மனதைக் கட்டுப்படுத்தி நிட்டையி லிருத்தி நிமிஷங்களைக் கழித்து வருவானாயினன். அவன் கண்கள் மெதுவாக மூடிக்கொண்டன; செவிகள் சப்தத்தைக் கேட்கும் சக்தியை இழந்தன. அவ்வாறு அவன் பேச்சின்றிப் பெரிய சாமியாரைப் போலத் தவஞ்செய்து வருங்காலை, நாட்கள் பறந்துபோயின. மாதங்களும் வருடங்களாக மாறிப் பின் அறுபது வருடங்களும் ஒரு முறை சுழன்றன. அவன் அகோரமான தவத்தில் ஆழ்ந்து கிடக்க, அருகில் வீழ்ந்த மண், தூசி, இலை, புஷ்பம் முதலியவைகள் அவனை போர்த்திக் கொள்ளவும், இறுதியில் அவன் ஆயிரக் கணக்கான ஜீவ ஜந்துக்களுக்கு இருப்பிடமாகி இருந்த விடந் தெரியாது மறைந்துபோனான். என்றாலும், இன்னமும் அவனுடைய வாயிலிருந்து, "மரா மரா" என்ற சொற்கள் வந்து கொண்டிருந்தன. அவை மிகத் தணிந்த குரலில் பேசப்பட்டவை போலவும், கிணற்றுக்குள்ளிருந்து பேசுபவனுடைய சொற்கள்போலவு மிருந்தன. ஆகவே அவன்

கொஞ்சுமொழி ரஞ்சித கொம்பனையாள் தன் மனைவியின் நிலையை விடுத்தும், மழலை மொழி நழுவி வரும் பால்மண மாறாத வாயுடைய குழவிகளை வெறுத்தும் சமாதி நிலை அடைந்துவிடவே, அநேக வருஷங்கள் கழிந்து போயின.

இங்ஙனம் நிலைமை இவ்வா றிருக்க, ஒருநாள், அவ் வந்தணனுக்கு உபதேசித்துப்போன அம் முனிவர்கள் ஆங்கு வருதலும், அவ னிருந்த இடத்தில் அரியதோர் புற்று வளர்ந்திருத்தலை அளவிலா ஆச்சரியத்தோடு நோக்கி உள்ளூர உவகை பூத்தவர்களாகி, "வேதியரே! வெளியே வாரும்!" என்று கூப்பிடவே, அவர்களது குரலோசை தவ நிலையிலிருந்த அப்பூசுரர் செவியில் புகுதலும், அவர் திடுக் கிட்டு எழுந்து கண்விழித்துப் பார்த்தார். அவ்வாறு பிர சன்னமான அந்தணர் நன்னய மானிட மன்னரே போல் தோன்றினர். பசி, தாகம், துயில் முதலிய தேகபாதை களால் வாட்டப்பட் டிருந்தும், அவர் எவ்வித மாறுபாடும் தோன்றாத அடலும் திடமு முடைய உடலத்தையும், அரிய சடாபாரத்தையும் கொண்டு அடிமுதல் முடிவரை வடுவிலா உறுப்புகளையும் உடையவரா யிருந்தார். அப்பால் அம்முனிவர்களாகிய கானக வாசிகளது பாதாரவிந்தங்களைச் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டுப் பணிந்து வணங்கி, பேரன்பும், பெரு பக்தியும் பெற்றவராய், பல தாமும் நமஸ் கரித்து ஆனந்தக் கண்ணீர் பொழிய, அவர்களை விளித்துத் "துறவர் பெருமான்களே! பற்று முற்றுமற்ற மன்னவர் களே! அடியேன் உம்முடைய திருவருளால் பெரு மகிழ் வெய்தினேன்! என்னைப் புத்தெனும் நரகத்தினின்றும் புண்ணியம்பெற சத்திய சிரத்தையாம் சமாதியிற் புகுத்திய மகோத்தம மாகானுபாவரே! மறவேன், மறவேன். உம் நலந்தரும் மந்திரத்தை நாடினேன். உம்முடைய திரு வடியே, என்னை ஆட்கொண்டருளும். இப்பாக்கியத்தைப் பெற்றதால், உம்மைப் பாடுவேன்; அதற் கிசைய ஆடுவேன்; மலர் மாலை சூடுவேன். இன்னும் என்னால் செய்யக்கூடியன யாவும் உமக்காகத் தொண்டு புரியத் தயார்" என்று இரக்க மும் உருக்கமும் பெருக்கிய விதத்தினராய் விளம்பினார். விளம்பலும், அம்முனிவர்கள் அவருடைய உண்மையான உயர்ந்த குல குணத்திற்கும், கண்மணியாகிய பெண் மணியை வெறுத்த ஸ்திரமான மனத்திற்கும், நிரம்பவும்

பாராட்டி மட்டற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் கொண்டவர்களாகி, அவரது தேகத்தைத் தீண்டியும், ஆண்டு அமர்ந்து கொள்ளும்படி வேண்டியும், உபசரித்துக் "குருமொழிக்கு மறுமொழி கூருதவரும், மறுமைப்பயனை இம்மையில் அடைய வல்லவருமான நற்குணவிற்பனரே! நவிலுவதைக் கேண்மின்! நாம் முன்னால் உணர்த்தியவாறு, நீர் ஒழுகி யிராவிடில், இதுபரியந்தம் உமக்கு நேரக்கூடிய பாவமும் பழியும் பல நூறு மடங்கு பெருகியிருக்கு மன்றோ? அஃதெலாம் இப்பொழுது ஒழிந்தது. நீர் மகா தவ சிரேஷ்டராயும், போக நிஷ்டராயு மானீர் என்பதற்கு, நாம் உம்மை அழைக்க, நீர் திடசரீரியாக எங்கள் முன் தோன்றியதே போதுமான அத்தாட்சி யாகும். இதைவிட மாட்சியான காட்சி இப் பரந்த உலகில் வேறொன்று மில்லை யென்பது எமது கொள்கை. ஆகையால், இனிமேல், நீர் மானிலத்தில் மக்கள் வாழ்வு மாண்புறவும், உம்முடைய மனம், வாக்கு, காயம் முதலிய முப்பொறிகளால் இப் பிரபஞ்சத்தில் ஒப்பில்லா நாமத்தை நிலை நாட்டவும், உமக்கு, இப்புற்றிலிருந்து வெளி வந்தமைக்குப் பொருத்தமாக, "வால்மீகர்" என்னும் பெயரை அளிக்கின்றோம்" என்று கூறிப் புறப்பட ஆயத்தமாக, உடனே வால்மீகர் எழுந்து, இறுதி முறையாக வணங்கித் துதித்தார். அப்பால் முனிவர்கள் தம்மிடத்தே போயினர். போகலும் வால்மீகர் தமக்குத் தானே "ஆகா! என்ன ஆச்சரியம்! இக்கானக முழுதும் மாறியிருக்கின்றதே! நான் எத்துணை காலந் தவஞ்செய்தேனென்று எனக்கே புலனாக வில்லை. எனது! முன்னைய தொழில் கொலை களவுத் தொழி லல்லவா? "வழிபறிக் காரராம் வால்மீகர்" என்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருந்தாலும் நான் அத்தொழில் புரிந்து நீண்டகாலங் கடந்து விட்டமையால், எனது முன் சரித்திரத்தை அறிந்தவர்க்கன்றி, மற்றெவருக்கும் அவ்விஷயம் தெரியாது. அவ்வாறு அறிந்தவர்கள் இப்போது இறந்திருப்பார்கள் என்பது தெளிபு. என் பாவத் தொழிலிலிருந்து என்னை நல்வழிக்குக் கொணர்ந்த அம்முனிவர்களை ஆயிரந்தரம் நமஸ்காரம் பண்ணினுலும், அது அவருக்குச் சரியான கைம்மாருகாதன்றோ?" என்று இயம்பிக் கொண்டவராய், ஈஸ்வரத் தியானம் புரியலானார்.

மெய்ப்பொருள் நாயனர் சரிதை

(வண்ணைநகர்-ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை யவர்கள் எழுதியது.)

கலிவெண்பா

மேதிமுலைப் பாலை விரும்பியுழைக் கன்றருந்துஞ்
சேதி யெனுநாட்டிற் றிருமகளுக்—காதரமாய்
ஓதுந் திருக்கோவ லூரிலுமை பங்கனுக்குத்
தீதி லடிமைத் திறம்புரியுங்—கோதகன்ற
வையம் புரக்கும் மலாடர்குல மன்னனரன்
பொய்யின்மத மெங்கும் பொலிந்திடவே—செய்யகோ
லோச்சிச் சிவனடியார்க் குள்ளநெகிழ்ந் தேவல்செய்வார்
பாச்சு படைக்கலத்தாற் பற்றலரைப்—பேச்சின்றி
வெந்நிடப்பல் காலுடற்றி வெற்றிகொண்ட வாள்வீரர்
சொன்ன மொழிதவறுத் தூய்மையினர்—அன்னவடி
வாயயனுந் தேடி யறியான் சினகரங்கள்
நேயமதாய் நித்தியநை மித்திகமும்—மேயவின்ப
ஏழிசையின் பாட லிவைமுதலாந் தொண்டனைத்துந்
தாழுத லிலாதுமல்கத் தாபரித்து—வாழுமவர்
வெண்ணீ றணிந்த விமலனடி யார்பதமே
நண்ணுமுயர் மெய்ப்பொருளாய் நாடுவார்—எண்ணரிய
தேடியசெல் வங்களெலாந் தில்லைமன்றி லாடுமையர்
பாடுமன்பர்க் கானதென்று பத்திசெய்து—கூடியவர்
வந்தணைந்த போது மகிழ்ச்சியுட னீந்திடுவார்
சிந்தையுவந் திப்பணிகள் செய்திடுநாள்—நொந்தமுத்தி
நாதனெனும் வேற்றரசன் நம்பியொடு போர்புரிந்து
தீதுளகா லாள்வேழந் தேர்புரவி—ஓதுமிவை
யெல்லா மிழந்து எதிர்நிற்கா தோடுமிவ்வு
வில்வலியால் வெல்ல விறலிலனாய்—பொல்லாத
சூதுநெறி யாவென்றுத் தும்பைபுனை வேனெனவே
காதக னன்னுர்சிலங் கண்டுடலிற்—பூதியெங்கும்
பூசிச் சடாமகுடம் போலப் புனைந்துகட்டி
பாசகா னென்னப் படைகரந்த—தேசிலகு

புத்தகத்தி நற்கவளி கொண்டு புனிதமிக்க
சித்த புருடனைப்போற் சென்றரசன்—அத்தாணி

மண்டபத்தின் வாயிலிற்சென் றங்குவதி காவலர்கள்
கண்டுவிடப் பின்னர் கடுகிப்போய்த்—தொண்டனைப்போல்

நின்றவனைத் தத்தனெனு முள்வாயி லாள்நிறுத்தி
இன்றுநீர் செல்லற் கியையாது—மன்றல்கமழ்

தார்வேந்தன் பள்ளி கொளுஞ்சமய மென்றுரைக்க
போரரசர்க் கோருறுதி போதிக்க—நேர்பெறவே

வந்தேனென் றன்னவனை நீக்கி மகிழ்சிறந்து
தந்திரமா யுட்புகுபோய்த் தாபதனும்—இந்திரன்போற்

பொற்கட்டி லின்மேற் புரவலனார் கண்வளரச்
சிற்றிடைமா தேவி திருவடியைப்—பற்றியங்கு

மாடிருக்கக் கண்டு மருங்கணையத் தேவியிழிந்
தேடவர்தா ரானை யெழுப்பவுணர்ந்—தாடகநன்

மன்றுடையா ருக்கு வழித்தொண்ட ராமெனவே
துன்றுகரங் கூப்பித் தொழுதெதிரே—சென்றெனது

வாழ்வுவரப் பெற்றேன் வருந்தியிங்கு போந்ததெவன்
பாழ்வினையே னுக்குப் பகருமெனத்—தாழ்வடைந்த

வெய்யவதி சூரன் விமலனன்று கூறியுள
பொய்யில் சிவாகமநூல் போதிக்க—எய்தியிவண்

வந்தே னெனமொழிய மன்னவனு மிப்போதே
சிந்தை யுவந்ததனைச் செப்புமெனச்—செந்திருநேர்

இல்லாளில் லாம விருவோரும் வேறிடத்தே
மெல்லப்போய் வீற்றிருக்க வேண்டுமென—நல்லகுண

வேந்த னணங்கை விளித்துநீ ரிக்காலே
போந்திடுவீ ரென்றப் புரத்துய்த்துச்—சாந்தமுடன்

தவவேடங் கொண்டவனை யோர்தவசி வேற்றிப்
புவிவேந்தர் தான்கீழ்ப் பொருந்தி—நவமாய

ஆகமத்தி னுட்பொருளை யன்பா யருளுமென்றார்
நாக மனையான் நகைபுரிந்து—வேகமுடன்

கைத்தலத்தி லுள்ள கவளிகையைத் தன்மடிமே
வைத்தவிழ்ப்பான் போல வணங்குகையில்—பத்திரத்தைத்

தந்திரமாய்த் தாங்கியவன் ருனிளேந்த வப்பரிசே
சிந்தை யிரங்காது செய்துவிட்டான்—அந்தவிடத்
தன்னலா ரெங்க ளரனடியார் வேடமதே
உண்மைப் பொருளென் றுரைத்தயர்ந்தார்—தண்மையிலா
மாறுவே டன்புகுந்த போதே மனத்தையங்கு
தேறவைத்த தத்தனென்ற சேவகருங்—கூறரிய
வாள்கொண் டிமைப்போதில் வந்துகண்டவ் வாயுதத்தாற்
ருேளுந் தலேயுந் துணிக்கவெண்ணி—ஆளியென
ஓச்ச இரத்தவெள்ளத் துள்ளே விழுமரசன்
மீச்செல் காமுயர்த்தி வெட்டாதே—தீய்ச்சொருபர்
தன்னடியா ரென்று தடுத்துவீழ்ந் தாவரை
மன்னுதத்தன் தாங்கி வணங்கியினி—என்னசெய்வே
னென்றுரைக்க நம்மவரை யின்ஞெருவர் தாக்காமல்
இன்று கொண்டு போய்விடுநீ யென்றியம்ப—நன்றெனவே
கூட்டியே கும்போது கொற்றவற்குத் தீங்கிழைத்த
கோட்டமிலாப் பாவியைநாங் கொல்லுதுமென்—றீட்ட
[முடன்
ஓடிவந்த மாந்தரைப்பார்த் தொன்றுமியற் ருதிரென்று
நாடளிக்கும் வேந்தன் நவின்றனனல்—பீடுடையீர்
போகுதிரென் ருேதக் குடிகளெலாம் போயபின்னர்
வாகையுள வாளேந்தி வஞ்சகனேத்—தோகைசெறி
கானகத்தி லேகவிட்டுக் கைதவன்றன் சேதிதன்னேத்
தானறியப் போகுமுயிர் தாங்கிவைகும்—மோனமிகு
மன்னவனேக் கண்டு வணங்கியவ னேக்கொடுபோய்ப்
பின்னமின்றி விட்டுவந்தேன் பெடபுறவே—யென்னநின்று
செப்புதலு மின்றெனக்கு ஐயனிவன் செய்தநன்றி
இப்புவியி லார்புரிவா ரென்றுமகிழ்ந்—தப்பணியாள்
மீது கருணேகொண்டு வேத்தவையி லுள்ளவரை
ஆதரவோ டங்கே யழைப்பித்துத்—தீதிழையா
தென்மகனுக் கிவ்வரசை யேதமின்றிக் கட்டிவைத்து
இன்னலிலா தோம்பிடுவீ ரென்றுரைத்துப்—பொன்
[னியலும்
மன்றுதனி லாடும் மலரடியைச் சிந்தைசெய்தார்
வென்றிவிடை மேற்கயிலே வித்தகனர்—அன்றலர்ந்த

லக்ஷமி

செந்தா மரைவதனத் தேவியொடு காட்சிதந்து
பைந்தா ரரசேயென் பாதமதைப்—புந்திபுவந்
தெக்கால மும்பூசித் தெம்முலகில் நீங்காத
மிக்கபே ரின்பமுற்று வீற்றிருப்பாய்—இக்கணமே
வாவென்று கூறி மறைந்தனர்பின் மன்னவனார்
தேவருக்கு மெட்டாச் சிவலோக—மேவியங்கு
ஊழிகா லத்து முலவாத வின்பமுற்றார்
வாழிமன மேயவரை வாழ்த்து.

அறிவின் பயன்

தத்துவ நூல். V.

(B. S. குமார சுவாமிப் பிள்ளை யவர்கள் எழுதியது)

[அறிவின் பயன் என்ற தலையங்கத்தின் கீழ் எழுதப்படும் ஒவ்வொரு வியாசமும் தனி வியாசமாய் எழுதப்பட்டு அதாவது தொகுதியிலேயே முடிவுபெறும். இதன் முன் வியாசம் (Vol. III) மலர் 3-ல், 2-ஆம் இதழில் வெளி வந்தது. அதன் பின் சில அசௌகரியம், நிமித்தம் எழுத முடியாமற் போயிற்று. ஆனது பற்றி முன் பின்னாக இவைகள் தோன்றுவதை இதை வாசிக்கும் நண்பர்கள் பொறுமையுடன் மன்னிக்க வேண்டும்.]

முன்னுரை

(1) தத்துவ நூல் என்றால் என்ன? அந்நூலின் உபயோக மென்ன? ஏன் அந்நூலை நாம் கற்க வேண்டும்? சாஸ்திரப் பயிற்சி, உலக ஜீவிதம் இவைகளிலேயே தமது வாழ்நாள் முற்றும் செலவு செய்கின்ற பெரியோர்கள் பலர். தத்துவ சாஸ்திரம் வீணாக ஜீவிதத்தைத் தொலைப்பதேயாமென்றும் அறியக்கூடாத அறிவிற் கெட்டாத காரியங்களில் பல தர்க்கங்களையும் சமுசயங்களையும் கொணர்கின்ற அந்நூலைப் பயிற்சி செய்வதிற் பயனில்லை யென்றும் பகருகின்றார்கள். ஜீவிதத்தில் முழு நோக்கம் இன்னதெனக் கற்றுணர முடியாமலும் தத்துவ நூல் இன்ன நன்மைகளை

மானிடர்களுக்கு அளிக்க வல்லது என அறிய முடியாதது பற்றியுமே அவர்கள் அவ்வாறு கூறுகின்றார்கள். இரசாயன நூல் எனக் கனவிலும் கேட்டறியாத மானிடர் மிக்கோர்களுக்கும் அவைகள் தரும் நன்மைகள் மிக்க உண்டு; ஆனால் அந்நூலின் பொருட்டுத் தம் வாழ் நாள் முழுமையும் செலவு செய்து மிகக் கஷ்டமடைந்தவர்கள் அப்பயனைச் சற்றேனும் பெற்றிலார். அவ்வாறே தத்துவ நூல், அந்நூலைக் கற்றுணர்வோர்க் கல்ல. பொது ஜனங்களின் நன்மைக்கே என நாம் கூறத் துணிவோம். சுய நலங் கருதாமல் பொது நன்மையைச் சமுதாய முன்னேற்றத்தையே கருதுகின்ற அறிவாளர்கள் தத்துவ நூல் கற்பது அத்தியாவசியம் எனக் கூறுவது எக் கூற்றானும் புறக்கணிக்கத் தக்க தல்ல.

உலக வாழ்க்கை

(2) தத்துவ சாஸ்திரத்தின் உன்னத நிலையினை இன்னதெனக் கண்டறிந்து அதின் விதிகளை நன் குணர வல்லமையற்ற பல வித்துவ சிரேஷ்டர்கள் "உண்மையான ஜீவிதம்"— "உலக வாழ்க்கை" இவைகளுக்குத் தத்துவ நூலும் அவசியமோ என நகைத்துப் பேசுவதையும் நாம் கேட்கின்றோம். மிருகங்கள், பறவைகள், வயிறார உண்ணல் வேண்டும். சுதந்திரமாக எங்கும் அலைந்து திரிய வேண்டும். அதுவே வாழ்க்கைக்கு அவைகளுக்கு இன்றியமையாதது. ஆறறிவும் அதற்கு மேலறிவு முடைய மானிடர்களுக்கு "மனதிற்கு ஊண்" 'மனதிற்கு உற்சாகம்' இவை யளிக்கின்ற "விவேகாபி விருத்தி" அவசியமில்லையா மெனக் கருதும் அறிவாளர்களுக்கு நாம் என்னென்று கூறுவோம்? உலகத்தில் பிறந்த மனிதர்கள் எல்லாம் நந்நிலைமையில் இருந்தாலும், வறுமை, பிணி, சாக்காடு இவைகள் உலகில் இருந்து அகன்றிருந்தாலும், நன்மை பயக்கும். உயர்ந்த சமுதாயம் ஒன்றை உண்டு பண்ணுவதற்கு அவசியமான காரியங்கள் அனேகம் உண்டு; தற்கால ஜீவிதத்திலேயே சரீர அவயவங்கள், மனம் இவைகள் சார்பாக அபிவிருத்தி யடைந்து கொள்வது மிகவும் அவசியமாமென நன்கறிகின்றோம். உயிரும் மெய்யும் களிகூர்ந்தே அனேக நன்மைகளை மனிதர்களுக்கு அளிக்க முடியு மெனக் கருதுகின்றோர் தத்துவ சாஸ்திரம் உபயோகமற்ற தெனக் கூறத் துணிய மாட்டார்கள்.

அந்நூலைக் கற்பது "சமயந் தொலைப்பது" எனக் கூறவும் துணியார்.

எந் நூலுக்கும் தாய் நூல்

(3) எல்லா விதப் பயிற்சிகளுக்கும் ஒப்பாக உயர்வாகத் தத்துவ சாஸ்திரமும் முதன்மையாக அறிவின் வளர்ச்சியையே முற்றும் கருதுகின்றது. சாஸ்திரங்கள் எல்லாவற்றிற்கும் தாய் நூலாக அவைகளுக்கு ஒற்றுமையும் அளித்து அதாவது உபயோகத்திற்குத் தக்கவாறு பற்பல வகுப்புகள் வகுத்து, நமது நம்பிக்கை குணங் குற்றங்கள், தீர்மானங்கள், இவைகளைச் சீர்திருத்தஞ் செய்து உண்மையான பரிசோதனைக்குக் கொணர்வதும் தத்துவ நூலின் கொள்கையாகும். கணித நூலார்,—சரித்திர ஆசிரியர்கள்,—சத்தி நூல், சட நூல் வேறு நூல் வல்லார்,—இவர்கள் நீங்கள் கேட்கின்ற வினைக்களுக் கெல்லாம் விடை பகர்வார்கள்; ஆனால் தத்துவ நூலார் அவ்வாறு கேட்ட கேள்விகளுக் கெல்லாம் வல்லவரா யிருத்தல் முடியாது. எக்கேள்விக்கும் இடந்தருமாயினும் தெளிந்து அறியக்கூடிய பாகம், வேறு தனி நூலாக விலகிக் கொள்கின்றது. இப்போது வேறு சாஸ்திரங்களாய்க் கருதப்படும் வான சாஸ்திரமும் உள நூலும் ஒரு காலத்தில் தத்துவ நூலின் பகுதிகளா யிருந்தன. சாஸ்திர சரித்திரங்கள் பல பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகமும் தனி நூலாய் அபிவிருத்தி யடைந்து ஊக்கமளித்துக்கொண்டிருப்பினும், இன்னும் பற்பல சாஸ்திரங்களை யுடைத்தாய் என்றும் இளமையாய் இன்பம் அளிக்க வல்லது; புத்தறிவைக் கொணர்வது தத்துவ நூலேயாம்.

நமது அறிவை எவ்வாறு விருத்தி செய்வது?

(4) தத்துவ நூல் எந்தக் கொள்கையையும் ஒரே பிடிவாதமாய்க் கூற இடந்தராது. இன்று நாம் உண்மையென நம்பி யிருப்பவை நாளை மாறினும் மாறலாம். நமது அறிவிற்கும் எட்டாத கர்ம ஞான யோகங்களின் முடிவை எய்துவதற்கு எம்மட்டு முயல்கின்றார்கள்! இவ்வுலகம் இப் பிரபஞ்சம், நமது ஐம்புலன்களுக்குப் புலப்படுகின்ற தன்மையில் ஓர் விதியையும் நீதியையும் அனுசரித்துப் படைக்கலாயிற்றே? தானாய்த் தரணியாய் உற்பவித்ததோ, இப் பிரபஞ்சத்திற் தோன்றி மாய்கின்ற ஜீவராசிகள் எல்லாவற்றையும் அடக்கி ஆளுகின்ற மனிதனுக்கு மனோ சக்தியைத் தந்த

அறிவின் பயன்

அகவுணர்ச்சி (Consciousness) எவ்வா றுண்டாயிற்று? அதன் நிலை யென்ன? அவ்வுணர்ச்சி உற்பத்தியான விதமும் அபிவிருத்தியடையும் விதமும் என்ன? அவ்வுணர்ச்சியினால் என்ன பய னெய்துவோம்? நன்மையுந் தீமையும் நமது வாழ்க்கைக்கு அவசியமோ? தீமையை இவ் வுலகத்தி னின்று அறவே நீக்கி ஒவ்வொருவருக்கும் நன்மையைக் கொண்டு வர முடியுமோ? இவைகள் இன்னும் இவை போன்றவைகள், பல கேள்விகள் எல்லாம் தத்துவ நூலார் ஆராய்ச்சி செய்து அவைகளுக்குத் தார்க்கிக நியாயங்கள், தகுதியான விதி முறைகள் ஏற்படுத்துகின்றார்கள். தாம் கூறுவதும் முற்றிலும் உண்மை யென ஒரு போதும் கூறத் துணியவும் மாட்டார்கள். சிற்றறிவு இன்னது பேரறிவு இன்னதெனப் பிரித் தறிந்து உண்மையான அறிவை எய் தும் தத்துவ நூலார் தரும் பயன்கள் விலை மதிக்க முடி யாதவைகள். சமயப் பயிற்சியில் மட்டுமே பழகி வரும் பல வித்துவ சிரோமணிகள் தாம் கூறுவதே முற்றிலும் உண்மை, தமது அறிவிற்கு எட்டிய மட்டும் ஆராய்ந் தறிந்து கூறும் விதிகள் ஒருவராலும் மறுத்துரைக்க வொண்ணாது, சர்வ சமயத்தாரும் இதர அறிவாளர்களும் இவ்வுண்மையை ஆதாரமாய் வேத வாக்கியங்களாய் அனுட்டித்தல் வேண் டும், எனப் பிடிவாதஞ் செய்கின்றார்கள். எமது சைவ சித்தாந்த உண்மையின் தத்துவங்களைக் கண்டிடாத வைஷ் ணவ சம்பிரதாயங்களை உண்மைகள் எனக் கூறுவது நியாயமோ எனத் தூற்றுகின்ற சிவபக்தர்களின் வைஷம்மி யத்தைப் பார்த்து எளனஞ் செய்கின்றார் கிறிஸ்து மதப் பாதிரியார். உங்களது சமயப் பயிற்சி யொன்றும் உல கிற்கே அவசியமில்லை, ஒழுக்கம் ஒன்றையே—ஆதரித்துத் தன்னைப்போல் பிறரைக் காப்பரேல் உலகம் அதி சீக்கிரம் முன்னேற்ற மடையும் எனக் கூறுகின்றார் இன்னொரு சாரார். உலகத்தின் நாகரிகத்தையும், பொருட் பண்டங்களையும் சமு தாய நிலையும், மிகவுந் தப்பிதமென்றும் ஆனால் அவைகளைச் சீர்திருத்த முயல்வதும் 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை கொண்டாற் போலாகும் என்றும் கூறுகின்றார் வேறு சிலர். ஆகவே இவர்கள் கூறுவதனைத்தும் முற்றிலும் உண்மை. முற்றிலும் தப்பிதம் எனக் கூறாமல் முதன்மை யான உண்மையை யாரே அறிய வல்லார் எனக் கூறு கின்றார்கள் தத்துவ ஞானிகள்.

மனிதனும் பிரபஞ்சத்தின் அம்சமே

(5) தத்துவ நூலாராய்ச்சி செய்ய சக்தியற்றவர்கள் தமது வாழ்நாளைக் கேவலமாய் மிருகங்களுக் கொப்பாகக் காலங் கழிக்கின்றனர். தாம், தமது மக்கள், மனைவி, பந்து மித்திரர் இவர்கள் தவிர இவர்களுக்கு வேண்டிய தொன்று மில்லை; இவர்களைத் தவிர உலகம் வேறில்லை; தாம் வாழ்நாடு இராமராலோ அன்றி இராவணாதிகளாலோ ஆட்சி செய்யப்படினும் தனக் கொன்றில்லை. தாம் உயிரோடிருக்கும் வரையும் தம்மைச் சார்ந்தார்க்கு ஊண் உடைப் பொருள் தேடி யளித்து அவர்களை ஆதரித்துத் திருப்தி செய்ய வேண்டியதைத் தவிர வேறென்ன முயற்சி செய்யவேண்டும்? இவ்வாறு என்றும் சுயநலமே கருதுகின்ற இல்லறவாசிகள், தத்துவப் பொருள்களையும் நீதியின் நீதிகளையும் ஆராய்ச்சி செய்து அபிவிருத்தி செய்வான் முயற்சிக்கின்ற தத்துவ ஞானிகளை இகழ்ந்து கொண்டிருந்தாலும், எப்பொழு தேனும் தாம் விரும்பிய வாறு இன்பம் எய்தினார்களில்லை. தனது இன்பத்தையே நாடி துன்பத்தையே அடைகிறார் கள். இவர்கள் ஒரு தினமேனும் கவலையற்றிரார். தாம் எய் தும் எண்ணம் கைகூடினும் என்றைக் கேனும் திருப்தி யடையார். அன்றாடம் இரந் துண்டு, உலகம் முழுவதுமே தனது இல்லம், சூரிய சந்திரர்களே தனது தீபச் சுடர்கள், சமுத்திரமும் மனிதர் எறிட்டும் பாராத பாலை வனங்களும் அடர்ந்த காடுகளும், அக்காடுகளில் வசிப்பதான சகல பிராணிகளும் தமது சொந்தப் பொருள்கள் என எண் ணிக் கொண்டே, தெருத் திண்ணையிலோ, சத்திர வாச லிலோ, படித்துறைகளிலோ இரவு தூங்குகின்றார்கள். அனேக ஞானிகள். "நான் தூங்கி எழும் முன் என்னை அன்புடன் கூவி அழைக்கின்ற அதி காலையில் எழும் பறவைகள் எனக்கு எவ்வளவு சங்கீதத்தையும் இன்பத்தை யும் பகர்கின்றன. நான் எழுந்து காலைக் கடன் முடித்துப் போகும் முன்னமே ஓர் புண்ணிய தேவி எனக்கு அமுதளிக் கத் தயாராய் இருக்கின்றாள்; நான் அவள் வாசல் முன் னின்றதும் இனிய முக மலர்ச்சியுடன் அமுது பகர்ந்து அனுப்புவாள். எனக்கு இனி வேண்டிய தென்னை! எனது விருப்பம் என்னை?" எனக் கூறுகின்ற துறவிகளிலும் பெரிய வர் உளரோ? தாம் காண்கின்ற எப்பொருளும், தம்மிடம்

அறிவின் பயன்

கேட்கப்படும் கேள்விகள், ஒருவருக்குப் பேரானந்தத்தை யும் உவகையும் அளிக்க அவைகளே இன்னொருவருக்கு வெறுப்பையும் துன்பத்தையும் தருகின்றன. ஆகவே, இன்பமும் துன்பமும், விருப்பும், வெறுப்பும் அவரவர் தம் மனோ நிலையைச் சார்ந்ததன்றி அப்பொருள்கள் பற்றி யல்ல. இல்லாள்வான், தமது அவாவிற்கும் அவசியத்திற் கும் வேண்டும் பொருள்கள் பற்ருது என்றும் அதிருப்தி யுடன் உலகத்தையே வெறுத்துக் கொள்கிருன்; அனேக ரைப் பழி கூறுகின்ருன்; எவ்விதமாவது இந்த ஜென்மத்தை இப் பாழ் உலகில் கழித்துக் கூட்டவேண்டும் என்று மனோ ராச்சியத்திற் கடிமையாகி வாழுநாளனைத்தும் வீணாளாய்க் கழிக்கின்ருன்; கலங்கிப் பரிதபிக்கின்ருன். தத்துவ ரீதி யாக இவ்வுலகின் அகப் பொருள் புறப் பொருள்களை உள்ள வாறு கற்றுணர்ந்திடில் இவ்வுலகமானது நன்னோக்கத்துட னேயே நற்பய னளிப்பதற்கே தோன்றிய தெனவும் சினேகி தர், சத்துருக்கள், இன்பம், துன்பம், நன்மை, தீமை என ஒன்றிற்கொன்று விரோதமான பொருட்கள், செயல் கள் இயற்கையாலன்ன தல்ல வென்றும் நன் கறியப்படும். உலகம் நம்மதே, நாமும் இவ்வுலகத்தின் ஒரு அம்சமே, எனக் கருதப்படும் எப்பயிற்சிக்கும் எம்முயற்சிக்கும் நுட்ப அறிவு தரும் திருவள்ளுவர் குறளடி

> "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம்—வாய்மையோ
> டைந்தும் சால்பு ஊன்றிய தூண்"

என்றபடி இவ்வைந்து குணங்கள் பற்றி யொழுகும் மாந்தர் களுக்குத் துன்பம் எய்துவது துர்லபமாகும். தனது நிலை யினை மேன்மைப் படுத்துவதற்குத் தனது அறிவின் அபி விருத்தி இன்றி யமையாத ஒரு பொருளாதலால் தன்னந் தனியாக ஆலோசனை செய்து உலக இயற்கைக்கும் தனக் கும் உடைத்தாய தத்துவ குணங்களைக் கண்டறிந்து, தனக் கும் பிறருக்கும் நற்பலன் அளிப்பதாய தன்மையை எய்து வது ஒரு அசாதாரண அசாத்திய காரியமல்ல. அளவிடக் கூடாத நமது அறிவிற் கெட்டாத இப்பிரபஞ்சத்தின் மத்தி யில் நாமும் அவசியமாகிய பொருளோ வெனத் திகில் அடைந்து வெறுப்புக் கொள்ள மாட்டோம்.

தான்—பிறர் ; அகம்—புறம்

(6) தான் பிறர் இவ்விரண்டிற்கு முரிய பேதங்கள் குன்றி வர, அறிவு மிக வளர்ந்து வரும் மனிதனே யாவையும் அறிந்து அளந்து கணக்கிடும் வல்லமை பெற்றிருக்கிறான். உண்மை யென்பது மனிதன் கண்டறிந்ததே. இடமும் சமயமும் பிரபஞ்சத்திற் குரித்தாய இதர பொருள்களும் மனிதன் மனத்தினின் றெழுந்ததே. மனதிற் கெட்டாத எச்செய்கையும் எவ்விதியும் ஆராய்ச்சி செய்வதற்குரிய தல்ல எனக் கூறு நின்றார் சிலர். இவரது அபிப்பிராயம் முற்றிலும் பிசகானதே. தன்னைத் தான் அறிவான் பொருட்டு தத்துவ ஆராய்ச்சி செய்கின்ற அறிவாளர்களுக்கு இடுக்கண் விளைவிப்பதே யாகும். நாம் காணப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் நமது ஐம்புலன்களால் அறியப்படும் ஒவ்வொரு கொள்கைக்கும் நமது அகம்—புறம் இவற்றிற்கும் ஏதேது உடன்பாடு வேற்றுமை காணப்படுகின்றதோ, அவைகளை நுட்ப விவேகத்துடன் ஆராய்ச்சி செய்கின்ற பொழுது நமது புலனறிவு மிகுந்த விசாலமாகும். ஆத்மாவின் உளம் இன்னதென நன்கறியலாகும். அஹம்—இதம் (Subject and Object) என்றவைகளின் உடன்பாடு வேற்றுமை இவைகள் நன்கு துலங்கும். தத்துவ தார்க்கீக நிலையில் நமது எண்ணங்களின் கருத்தை அபிவிருத்தி செய்து அறிவை வளர்ப்பதுடன் நமது கர்மங்களையும் நாம் நேசங் கொள்பவைகளையும் அபிவிருத்தி செய்வோம். இழிவாய்க் கருதப்படும் பயங்கள், நம்பிக்கைகள் நம்மை அணுகாமலும் மனிதருக்கு உண்மையான சுதந்தரமும் சுவா தந்திரியமும் செவ்வெனக் கொடுத்து, இவ்வுலகிற்கு மனிதனும் ஓர் இன்றி யமையாத பொருளெனக் கருதப்படும்.

உதாரணமாக ஒவ்வொரு நூற்றாண்டிலும் தத்துவ நூலாராய்ச்சியினால் சாஸ்திரப் பயிற்சியினால் ஒவ்வொரு நாடும் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிற தென்றும்—அவ் வபிவிருத்தியின் பயனாக நமது அறிவும் முயற்சியும் எவ்வளவு விசாலமாய் வளர்ந்திருக்கிறதென்றும்—எவ்வளவு நூதன சாஸ்திரங்கள் நூதன நூற்கள் நூதன விதிகள் தோன்றி யிருக்கின்றன வென்றும்—நாம் எம்மட்டு நாகரிக மடைந்து அனேக சௌகரியங்களையும் இன்பங்களையும் அனுபவிக்கின்றோ மென்றும் ஆலோசித் தறிவோமாயின்,

மனிதனின் விடாமுயற்சியும் ஊக்கமும் உற்சாகமும் நன்றாய்த் துலங்கும். கழிந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தினால் ஆயுர்வேத மாகின்ற மருத்துவ சாஸ்திரமும் இரசாயன நூலும் இரண வைத்தியமும் (Surgery) எவ்வளவு முதிர்ச்சியடைந்திருக்கின்ற தெனப் பெரும் பாலும் அறிந்திருக்கிறோம்.

நூற்பயன்.

(7) தத்துவ சாஸ்திரங் கற்பதின் பயனென்ன? எந்த வினாக்கள் யாரிடமிருந் தெழுந்தாலும் அவைகளுக் கஞ்சாது பதில் கூற வல்லமை பெறுவதற்காகவோ? அன்றி யார் எவ்வினாவிற்குப் பதில் கூறினும் அவை முன்னிலும் உண்மையா யிராது, ஒரு விதச் சந்தேகமும் உண்டாகாத ரீதியில் நான் பதில் கூறுவேன் எனச் சித்தாந்தமாய்க் கூறுவதும் தப்பிதமே. நம்முடைய ஆஞ்ஞா சக்கரத்தையும் அதினின்றெழும் எண்ணங்களையும், அவ்வெண்ணங்களால் ஏற்படுவதான செயல்களையும் நன்றாய்ச் சீர்திருத்தஞ் செய்து, பிடிவாதமான சித்தாந்தக் கொள்கைகளைத் தலையெழவிடாமற் தணித்து "நாம் கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்ற ஆன்றோர் வசனத்தையும் நாம் நன்கறிந்து ஒழுகுமாறு நீதி புகட்டுவது தத்துவ நூலேயாம். யோகஞான நிலையின் நின்றறிந்தாலும், நாமும் இப்பிரபஞ்சமும் ஒன்றோடொன்று உடன்பாடுடையவராதலன்றி நாம் தோன்றி மாய்ந்தழிகின்ற அற்பப் பிராணியல்ல, ஆயின் நன்மை விளைவிக்க சக்தி பொருந்திய விசேட அம்சம் என்ற உண்மை நெறியை உள்ளத்தால் கண்டறிவோம். தத்துவ சாஸ்திரம் வளர்ந்துவருந் தோறும் நமது அறிவு விசாலமடைந்துவரும்; நமது அறிவு விசாலமடையுமப்பொழுது உலகில் இன்னல் குன்றி இன்பம் மிகுந்துவரும்; இன்பம் மிகுந்த எல்லோரும் சகோதரராக சமத்துவ மடைவர்; அப்பொழுது உலகில், ஆசை, பொறாமை, லோபம், மூர்க்கம், துணிபு போன்ற துர்க் குணங்கள் வேருடன் களைந் தெறியப்படும்; உலகில் வறுமையும் பிணியும் அணுகாமல் அகன்றுவிடும். எல்லோரும் இன்னல் காணாது நித்தியானந்தமாய் வாழ்வார்கள். இதுவே தத்துவ நூலின் முக்கிய கருத்தாகும்.

முடிவுரை

(8) தத்துவ நூல் என்ன பயன் தரும் என்றே இச்சிறு வியாசத்தில் கூற எண்ணினோமன்றி, அந்நூலின் பகுதியையும் அப் பகுதிகளின் உட்பிரிவுகளையும் அந்நூலினின் றெழுந்த இதர நூற்களையும் அவைகளாலாய கல்வி அறிவின் முதிர்ச்சியையும் கூறத் துணியவில்லை. அங்ஙனமாயின் தத்துவநூல் பற்றி அநேக வியாசங்கள் எழுத வேண்டுமென்றும் அவை யனைத்திற்கும் நமது மாதாந்தப் பத்திரிகை இடந்தராதென்று அஞ்சியும் இவ் வியாசத்தைக் கூடிய வரையில் வெகு சுருக்கமாய் முடித்தோம்.

நங்கையர் துயரமும் நாட்டின் விடுதலையும்.

(ஸ்ரீமான் முகம்மது ராம் எழுதுவது)

உலகத்தோருக்கு ஊழிகால மட்டும் வழிகாட்ட வுற்ற ஒப்புயர் வற்ற ஜோதிகளாம் ஸ்திரீ ரத்தினங்களை அளித்துள்ள நம் பாரத பூமியின் புதல்வர்களுக்கு, நமது ஸ்திரீகளின் பெருமையை உணர்த்த வேண்டிய நிலைமையும் நேர்ந்ததே என்று நினைக்க நமது நெஞ்சம் வருந்துகின்றது. பெண்மை யென்ற பெருஞ் சக்தியை, ஒளி விளக்கை உலகெங்கு முள்ள ஆண்கள் அடக்கி யொடுக்கி மிதித்து நசுக்கி ஒதுக்கி வைக்க முயல்கிறார்கள். அவர்கள் தங்கள் மடைமையின் பயனைத் தாங்களே தான் அநுபவிக்கிறார்கள். சக்தி யில்லாததால் பலஹீனர்களாகவும் ஒளியில்லாததால் இருளிலும் கிடந்து தவிக்க நேர்ந்திருக்கிறது. இது தெரிந்தும்கூட அகம்பாவம் மிக்க ஆடவன் பெண்மக்களுக்கு அவர்களுக்குப் பிறப்புரிமையாயுள்ள சம அந்தஸ்தையும், கௌரவத்தையும், மகிமையையும் கொடுக்க ஒப்புகிறானில்லை. எனினும், இயற்கையின் விதி மாறிவிடுமா? அவ் வியற்கை இப்போது பெண்மக்களின் சார்பில் நிற்க ஆரம்பித்து விட்டது. வெடிமருந்து எவ்வளவுக் கெவ்வளவு

கெட்டிக்கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதற்கு மீறி வெளிக் கிளம்பும் சக்தி அதிகரிக்கின்றது. அது போலவே, நமது ஸ்திரீகள் எவ்வளவுக் கெவ்வளவு நசுக்கப் படுகின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் நம்மை மீறி விடுதலை அடைவார்கள். அவர்கள் மிஞ்சிப் போய்விட் டாலோ ஆண்கள் கதி மிகப் பரிதாபகரமாகி விடும்.

நம் நாடு பெண்மக்களை எந்நாள் வரை கௌரவித்து வந்ததோ அந்நாள் வரை அறிவிற்கும், சுதந்திரத்திற்கும், வீரத்திற்கும் எதிரற்ற புகழ்பெற்று விளங்கியது. நாம் புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் மூலமாயும் பிற பழைய நூற்கள் மூலமாயும் அறிந்துள்ள ஸ்திரீகளெல்லாம் பரிபூரணமான சுதந்திரத்துடனும், ஒழுக்கத்துடனும், கல்வியுடனும், கற்புடனும் விளங்கியதாகவே காண்கிறோம். அபலையான ஒரு ஸ்திரீ அன்னிய தேசத்தில் ராக்ஷதர்கள் மத்தியில் மகா பராக்கிரமசாலியும், கொடியோனுமான ராவணனையும் எதிர்த்துத் தன் கற்பைக் காப்பாற்றிக்கொண்ட சரித்திரத்திற்குச் சீதாயணம் என்று பெயர் அமைந்திருத்தலே தகும். மற்றொரு ஸ்திரீ நளாயனி என்பாள் இயற்கை யொழுங்கையே மாற்றுவித்துத் தன் பர்த்தாவிற்கு உயிரை நிலைக்கச் செய்யும் ஆற்றல் பெற்றாள். சாவித்திரி, ராமன், கிருஷ்ணன், பீஷ்மன் போன்ற தெய்வீக வீரர்களும் தடுக்கொணாத மரணத்தின் வாயினின்று உள்ளன் பால் தன் கணவனைக் காப்பாற்றினள். இதைவிடப் பெண்கள் சிறப்பெய்த முடியுமா? இவ்வளவு மாண்பும் வலிமையும் பெற்ற பெண்மக்களையா நாம் இதுபோழ்து அறிவிலிகளாகவும், அடிமைகளாவும் வைத்திருக்கிறோம் என்ற எண்ணம் உள்ளத்தில் பாயும்போது, உங்கள் உடலத்திலுள்ள ஒவ்வொரு நரம்பும் துடித் தெழவில்லையா?

வாசகர்களே! அத்துணை உன்னத பதவியை அடைந்த பெண்மக்கள் கடந்த பத்து நூற்றாண்டுகளாக அலட்சியமும், அகௌரவமும் அடையலாயினர். அந்நாள் முதல் நமது தேசமே நமது சமூகமே மதமே அகௌரவம் அடைய ஆரம்பித்தது என்றறிக. பல கவிகளும், பிற துறவிகளும் பெண்களை வெறுத்தும் இழித்தும் உரைக்கலாயினர். சமூகத்தாருக்கு அறிவிலும் ஒழுக்கத்திலும் வழி காட்டிகளா யிருக்க வுற்ற வேதியர்களும் தமது பெண்டிரை

நிரக்ஷர குக்ஷிகளாயும் துன்பத்துக் குறைவிடமாயும் செய்து விட்டனர். பெண்பாலின் கற்பில் அவ நம்பிக்கை கொண்டு கணவனை யிழந்ததும் அவர்களின் அழகிய கூந்தலையும், ஆபரணங்களையும், வஸ்திரங்களையும் அபகரித்து மொட்டைத் தலையும் வெள்ளைத் துணியுமாய் வீட்டினுள் அடங்கிக் கிடக்க வைத்தனர். பின் பணத்திற்கு மணமகனையும் மணமகளை யும் விற்பதும் வாங்குவதுமான வழக்கங்கள் ஏற்பட்டன. சந்தையில் ஆடுமாடு வாங்குவது போல் பெண்களை அவர்கள் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படா விட்டாலும் மணமகளைச் சேர்ந்தவர்கள் வாங்கிக்கொண்டனர். பெண்கள் மழலைச் சொல் மாறாத முன்பே நம்மவர்கள் அவர்களுக்கு விவாகம் செய்துவைத்து நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் நாளடைவில் அவர்களையும் தாமெடுத்த பிறவியையும் எண்ணி யெண்ணிக் கண்ணீர் சொரியுமாறு செய்துவிட்டனர். நாம் மட்டுமா? உலகில் பல தேசத்தினரும் தமது ஸ்திரீகளைச் சரிவர நடத்துவதில்லை.

இங்கிலாந்து தேசத்தில் "ஒருவன் தன் மனைவியை யும், ஒரு துக்காணியையும் இழந்துவிட்டானெனில் துக் காணியை இழந்தோமே என்று தான் வருந்துவான்" என்று ஒரு பழமொழி வழங்கிவருகிறது. பிரஞ்சு தேசத்திலோ வைக்கோலா லான மனிதனும் தங்கத்தா லான ஸ்திரீயும் சமானமே என்று கூறப்படுகிறது. ஜர்மனிக்காரர்களோ "உலகில் இரண்டு ஸ்திரீகளைத்தான் நல்ல ஸ்திரீகளென்று கூறலாம்—ஒருவள் செத்துப்போனவள், மற்றவள் காணு மல் போனவள்" என்று வழங்குகிறார்கள். ஸ்காட்லாந்து தேசத்தவர் "வஞ்சகமற்ற மனிதர்கள்தான் கலியாணஞ் செய்துகொள்கிறார்கள்; புத்திசாலியான ஆண்கள் கலியாண மென்பதைக் கனவிலும் கருதுவதில்லை" என்று சொல்லு கிறார்கள். அரபியர்களும் பாரசீகத்தவரும் ஸ்திரீகளும் பிசாசுகளும் இவ்வுலகத்தைவிட்டு ஒழிந்தால் நன்மையே என்று அடுத்தடுத்துக் கூறுவதுண்டாம். "குதிரை சாது வானாலும் துஷ்டையானாலும் அதற்குச் சாட்டையடி அவ சியமே; ஸ்திரீ சாதுவானாலும் துஷ்டையானாலும் அவளுக் குப் பிரம்படி அவசியமே" என்று கொரியா தேசத்தில் மற்றொரு பழமொழியுண்டு. கிறிஸ்து வேதத்தில் பெண் மக்களைச் சிலாகித்து ஒரு வார்த்தையும் காணப்படவில்லை.

இங்ஙனம் உலகத்து ஆண்மக்கள் பெண்மக்களை எவ்வளவுதான் வெறுத்த போதிலும், சுவற்றுக் கீரையை வழித்துப்போடடி சுரணைகெட்ட வெள்ளாட்டி "என்றவன் கதையாக, அவர்களை விட்டால் உலகில் இன்பமும் மேன்மையும் பெற வேறு வகை யில்லை என்று உணர்ந்தே யிருக்கிறார்கள். மனிதன் தன் முகத்து மீசையையும் தன் வீரியத்தையும் அளவாகக்கொண்டு தானே ஸ்திரீயை ஆளவென்று பகவானால் படைக்கப்பட்டவன் என்று நிச்சயித்துக் கொள்கிறான். இந்த வீறுப்பை யெல்லாம் ஒரு விநாடியில் ஸ்திரீ ஒரு திவலைக் கண்ணீரால் இருந்த இடந் தெரியாமல் சிதறடித்து விடுகிறாளே என்பதை நினைக்க நினைக்க ஆண் மக்களுக்கு அவள் மேல் உள்ளூற அழுக்காறு புகைய ஆரம்பிக்கிறது. ஒருவன் சங்கீத சாஹித்திய சமுத்திரமா யிருக்கலாம்; ஆயினும் அவன் திறமை வெளியாவதற்குரிய வாத்தியக் கருவி யில்லாவிடில் அத்திறமை குடத்துள் அடங்கிய விளக்கா யல்லவோ வீண்போகிறது? எனவே ஆண்மக்களாகிய நாம் பெண்மக்களின் பெருமையைச் சரிவர உணர்ந்து அன்னாரைக் கௌரவிக்க வேண்டுமெனில், அவர்களெல்லாம் ஒருநாள் ஆகாயவிமானம் போன்ற ஒரு கருவி மூலமாக இவ்வுலகைக் காலி செய்துவிட்டு வேறுலகு சென்றுவிட்டார்க ளென்று கொண்டு நம் நிலைமையைச் சற்று யோசித்துப்பாருங்கள்! பெரிய வலிமிகுத்த எஞ்சின் நீராவி யில்லாவிடில் எங்ஙனம் இருந்த விடத்தில் நின்றுவிடுமோ, அங்ஙனம் பெண்ணில்லா விடின், ஆண் பிள்ளையின் வாழ்க்கை யெல்லாம் ஸ்தம்பித்து ஒரே யடியாய் நின்று போகும். அல்லது ஆண் பிள்ளை கருப்பந் தரிக்கும் சக்தியைப் பெறுவதற்குக் கடவுளை நோக்கித் தவம் புரியப் போகவேண்டும். அவன் தவம் முடிவதற்குள் மானுட சமுகமே பூண்டற்றுப் போய்விடும். அல்லது ஆண்மகன் கருத்தரிக்கும் சக்தியைப் பெற்றபோதிலும் ஒரு நாள் கேவலம் இருபத்து நான்கு மணி சாவகாசம் சிசுவைச் சுமக்கவோ, பிரசவ வேதனைப் படவோ துணிவுறாமல் பெண் மக்களுக்கு "எக்ஸ்பிரஸ்" தந்தி யடித்து அவர்களை வரவழைத்துக் கொள்வான்.

கற்பிலக்கணம்

(நன்னிலம்—திரு—பா. பக்கிரிசுவாமி எழுதுகிறார்)

'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.'

கற்பாவது மகளிர் மண முடியும் முன் மாதா பிதாக்களின் சொல்லைத் தட்டாது நடத்தலும், மன்றல் முடிந்த பின் மணாளரின் சொல்லைக் கடவா தொழுகலு மாம். இக் கடமை யொன்றையே கைக் கொண்டு நடப்பரேல் மற்றெல்லாக் கற்பிலக்கணங்களையும் கை வரப் பெற்றவ ராவர். நம் பழந் தமிழ் நாடு கணவன் சொன்ன சொல்லி னின்றுந் தவறு தொழுகிப் பெண்மை நலங் கனிந்த பெண் மக்கள் மிகுந்து காதலுக்கும் கற்புக்கும் உறைவிடமாய்த் துலங்கியது. திணை மரபுகளை ஆராய்வாக நோக்குவார்க்கு, இஃது தெற்றென விளங்கும். நம் புராதன நாட்டில் பண்டைக் காலத்தே கற்புக் கரசியர் கணக்கற்றூர் வயங்கின ரெனினும் சிறப்பு வகையில் திருவள்ளுவரது திருமனைவியார் வாசுகியம்மையாரே கூறத் தக்கவர். அம் மாது நல்லார் மாய்ந்தது கண்டு ஆற்றாத வள்ளுவனார்,

> "அடிசிற் கினியாளே அன்புடை யாளே
> படிசோற் றவறாத பாவாய்—அடிவருடிப்
> பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
> என்தூங்கும் என்க ணிரா."

என மனம் வருந்திப் பாடினர். இத் துணைப் பெரு மிதந் தங்கிய பெருமாட்டியின் சரிதத்தைப் படிப்பரேல், பழந் தமிழ் நாட்டில் நிலை பெற்றிருந்த கற்பு நெறியின் செவ்வியை அறிந்து கொள்ள லாகும்.

'குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்' என்பது நறுந் தொகை. இதன்படி மங்கையர்க் குற்ற அரும் பெற லறங்க ளனைத்திலும் பதிவிரதமே உயர் தா ஊழிய மாகின்றது. அனுதினமும் தன் ஆளன் உண்ட பின் தான் அருந்தலும், அவன் துயின்ற பின் தான் சயனித்தலும், அவ னெழு முன் தான் எழுதலும், கற்புடைய நங்கையரின் அதி முக்கிய கடமைகள்.

கற்பிலக்கணம்

'மனைத் தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை.'

என்பது திருவள்ளுவப் பயன். அதாவது இல்லறத்திற்குத் தக்க வண்ணம் துறந்தோரை உபசரித்தல், வறியவ ரிடத்தே யருளுடைமை, முதலிய நற்குணங்களும், வாழ்க் கைக்கு வேண்டும் பொருள்க ளறிந்து காப்பாற்றி வைத் தல், உண்டி சமைத்தலின் வல்லமை, உபகாரஞ் செய்தல் முதலிய நற் செய்கைகளு முடையவ ளாகிக் 'கொண்டான் குறிப் பறிவாள் பெண்டாட்டி' என்பது போல நாயகன் ஏவு முன் அவனது கட்டளையைக் குறிப்பா லுணர்ந்து அவ்வாறே நடந்து, அவனது வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டு மென்பதாம். மேலும் 'விருந்தில்லா வீடு விழல்' ஆதலின் தம் மகத்தை நாடிய அதிதிகளை அன்புட னுபசரித் தன்ன மளிப்பவராய், ஒழுக்கங் கெடுவதற் கேது வான கருமங்க ளனைத்தையும் கனவிலும் கருதாதவராய், தன் நாயகன் நீதியின்றியே சினந்த போதிலும், 'பெண் டிர்க் கழகு எதிர் பேசா திருத்த,' லெனத் தானும் எதிர் வாதம் புரியாது இதமே பேசி அக் கோபத்தை ஆற்றத் தக்கவராய், 'தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்' ஆக லின் தன் கேள்வன் தூர்க் குணனுயினும் அதனை வெளி யிடாது அவனது நற்குண நற்செய்கைகளையே பாராட் டிப் புகழ்ந்து அவனிடத்து மெய்யன்பு கொண்டு உபசரித் துய்பவரா யிருப்பவரே பத்தினிப் பெண்டி ராவர்.

'காவ லுனே பாவைபர்க் கழகு' என்றார் நம் அரு மைப் பாட்டியாரான ஔவைப் பிராட்டியார். காப்பின் றேல் மண்ணும் பெண்ணும் பிறர் வச மடைந்து தீமை யுறும். காவலே கன்னியர்க்கு அழகு. அக் காவலாகிய கற்பை மங்கையர் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

'சிறை காக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை.'

என்ற குறளடி இதனை வலி யுறுத்துகின்றது. மேலும்

'தனது வீட்டார் திறத்துப் பாங்காய்
ஒழுகிக் கொள்ளும் பெண் மணிகளே
சிறந்த ரத்தின மென்ப.'

என்ற மஹான் முகம்மத் நபி அவர்களின் உபதேச ரத்தினம் ஈண்டு குறிப்பிடத் தக்கது, உணரற்பாலது.

மேற் கண்ட கற்பிலக்கணங்கள், லட்சணங்களனைத்தையும் கன்னி யொருத்தி கைக் கொண்டு ஒழுகுவாளேயாயின் அவள் புகுந்த இடம் புண்ணிய க்ஷேத்திர மாகும். அங்கு தொட்டது துலங்கும். வைத்தது வழங்கும். மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். அவளது கழுத்து வாய்த்த கணவனுக்கு கசவா அமிர்த மாவாள். அவன் இருதயம் அவளிருதயத்தை விட்டு ஒரு போதும் இணை பிரியாது. அவளது உத்தம நடக்கை அவனுக்கு உன்னத பாடசாலை யாம். அவன் இம்மை உம்மை இரண்டிலும் இன்பத்தை யடைவான். அவள் பெய் யெனில் பெய்யும் மழை.

ஆகலின், பெண் மணிகாள்! உங்களுடைய கடனென்ன? அதன் இலக்கணம் என்ன? கடனாற்றலான் வருங் கண்ணிய மென்ன? என்பதைச் சற்றே யோசியுங்கள். விழியுங்கள். நம் தாய் நாட்டின் ஆதிப் பெருமையை நிலை நாட்டுங்கள். பாரத மாதாவை ஆனந்தத்தி லாழ்த்துங்கள். கலியுக வரதக் கந்தப்பன் கருணை புரிவான்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்.'

சுபம்! சுபம்!!

இன்ப துன்பம்

(ஸ்ரீமான் சு. கு. கோவிந்தசுவாமி பிள்ளை எழுதியது)

சர்வ வல்லப தயாபரமூர்த்தியின் பெருங் கருணையாலுதித்த மானிட வர்க்கத்தினர்க் கெல்லாம் தாயின் வயிற்றில் அவதரித்த பொழுதே இன்பமும் துன்பமும் உண்டாயிற்று. அவ் விரண்டையும் நாம் அனுபவிக்க ஏற்பட்டிருக்கின்றோம். எனவே, ஒவ்வொருவரும் ஏக காலத்தில்

இன்ப துன்பம்

இன்பத்தையும் துன்பத்தையும் சேர்த் தனுபவித்தல் முடியாத காரியம். இவ்விரண்டின் அனுபவமும் மாறி மாறி வரும் தன்மை உடையது. இன்ப துன்பமாகிய இரண்டும் இப் பிறப்பில் நம்மால் தேடிக் கொண்டவை யல்ல. முன் ஜென்மத்தில் அவரவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக் கேற்ப, இச் சென்மத்தில் அனுபவிக்க அவை வந்து சேர்வன வாகும். முன் ஜென்மத்தில் ஒருவன் புண்ணியவானு யிருந்திடில் இச் சென்மத்தில் அவனுக்குச் செல்வ முண்டாகும். செல்வ மிருந்திடில் இவ்வுலகில் சகல போக பாக்கியங்களு முண்டு. பொரு ளில்லாவிடில் உலக வாழ்க்கையில் இன்ப மில்லை. இது நிற்க. இனித் துன்பத்தைப்பற்றி சிறிது ஆராய்வாம். ஒருவன் முற்பிறப்பில் பாவங்களைச் செய்திருந்தால் இச் சென்மத்தில் அவனுக்குத் துக்க முண்டாகும். "இன்ப துன்பம்" என்னும் இரண்டுமே சுக துக்க மெனப் படும். சுகமும் துக்கமும் நாம் இச் சென்மத்தில் தேடிக்கொண்டவை யல்ல வென்பதை பின் வரும் செய்யுளா லறிக.

முந்து சென்மமே புண்ணிய மிகுந்திடில்
முக்கியம் செல்வம துண்டாம்
முந்து சென்மமே பாவமே மிகுந்திடில்
முழுமையும் துக்கம துண்டாகும்
அந்த ரண்டையு மொழித்திடில் பிறப்பில்லை
அரன் கழல் துணையாகும்
பந்த மானதோர் வேதங்கள் புராணங்கள்
படைத்ததை யறிவீர்கள்.

ஈண்டு இவ்வுலகின்கண் அவதரித்த மனிதர்கள் யாவரும் இன்பத்தைக் கரும்பென்றும் துன்பத்தை வேம்பென்றும் கருதியே ஒவ்வொருவரும் இன்பத்தைப் பெற எண்ணுகிறார்கள். அங்ஙனம் பெறுதற்குப் பொருள் வேண்டும். பொருளில்லையேல் 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை' என்றபடி இப் புவியில் சகல போக பாக்கியங்களையும் அனுபவித்தல் இயலாது. இத்தகைய பொருளுண்டாவதற்குப் புண்ணியஞ் செய்தல் வேண்டும். இந்த ஜென்மத்தில் புண்ணியஞ் செய்தால் அடுத்த ஜென்மத்தில் பொருள் சேர அதனுல் இன்பமும் கைகூடும். இனி, மேலுலகத்தில் இன்ப மடைய வேண்டுமாயின் அருள்வேண்டும். 'அருளில்லார்க் கவ்வுலக மில்லை' என்ற படி இந் நிலவுலகில் எவ்வளவு சிறப்பெய்தி வாழ்ந்தாலும் அருளுடை னிருந்து பகவா னருளைப் பெறு

விட்டால் மோக்ஷ சாம்ராச்சியத்தை இழப்போ மென்பது திண்ணம். இவ் வருளுக்கும் பொருள் உதவி யாகும். இப் பூமண்டலத்தில் பொரு ளிருந்தால் தான தருமங்களைச் செய்து ஆண்டவ னருளை அடைவதோடு இன்பத்தை யும், புண்ணியத்தையும், கீர்த்தியையும், எண்ணிய காரிய சித்தியையும், கதி பெறும் வழியையும் எய்தலாம். இதனை,

"பொருளிலார்க் கின்பமில்லை புண்ணியமில்லை யென்றும்
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற் சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே"

என்னும் இப்பாடலினால் உணரலாம். திருட்டாந்தமாக பொருளில்லான் தனக்கே பிண்டத்திற்குத் திண்டாடுவதைக் கண்கூடாகக் காண்கின்றோ மன்றோ?

இக் கருத்துகளை ஒவ்வொருவரும் ஆழ்ந்து யோசியுங் கள். உலக வாழ்க்கையில் இன்பத்தைத் தரும் பொருளா னது பணம் அல்லது திரவியமெனினும் பொருந்தும். எல்லை யற்ற இன்பத்தை யளிக்கும் பொருளான செல்வம் எக் காலத்தும் ஒருவரிடத்தும் நிலைபெற் றிராமல் சகடக்கால் போன்று சுழல்வதா கின்றது. அன்றிச் செல்வம் என்ற வார்த்தை யளவாகவே நாங்கள் ஓரிடத்திலே தரித்திராது வெவ்வேறு இடத்திற்குச் செல்வோம் எனும் பொருளும் தொனிக்கின்றது. இத்தகைய செல்வத்தை ஓர் இன்ப மென எண்ணவும் மதிக்கவும் கூடுமா?

"சிறப்பும் செல்வமும் பெருமையு முடையோர்
அறக் கூழ்ச்சாலை அடையினு மடைவர்"
"குடைநிழ விருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்"

என்ற அதிவீர ராமபாண்டியரின் அறவுரையை அகத்தில் உன்னிப் பாருங்கள். செல்வத்தை நாம் படைத்தோமே யன்றிச் செல்வம் நம்மைப் படைக்கவில்லை. மேலும் அச் செல்வத்தை நாம் பிறக்கும்பொழுது கூடவே கொண்டு வரவு மில்லை. "பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை" எனப் பட்டினத்தடிகளும் பகர்ந்தவாறு இடைநடுவே உண்டான இச் செல்வத்தைப் பெரிதென மதிப்பது எவ்வளவு மதி யீனம்? வானத்தின் மின்னலைப்போல் தோன்றி மறையும்

செல்வத்தைச் சதமென்று நம்பாதீர்கள் ; அரிதினு மரிதாகிய மானிடப் பிறவிபெற்ற மாந்தர் ஒவ்வொருவரும், ஜீவர்களிடத்தில் அன்பும், ஆதரவும், அற மனது முடையவர்களா யிருந்து புண்ணியத்தைக் கொண்டு கடவுளுக் கன்புடையவராய்ச் சர்வ பரிபூரண கருணு நிதியாகிய எம்பெருமானின் திருவருளைப் பெற்று மறு பிறவியில் மிக்க செல்வ வந்தரா யவதரித்து இன்பமாயினும் சரியே துன்பமாயினும் சரியே, துன்பத்தையும் இன்பமாகக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து சித்திமுத்தி பெறுவீர்களாக.

நகர வாழ்க்கையும் கிராம வாழ்க்கையும்

(திரு—வ. கிருஷ்ண ஸ்வாமீ சர்மா எழுதுவது.)

நெருக்கமின்றி இருக்கவும் வழி யற்று வாழ்ந்து வரும் நமது சகோதரர்களான நகர வாசிகள் மாபெரும் பாபஞ் செய்தவரே போலும். நிரந்தரமான அமைதியும், மனோல்லாசமான மகிழ்ச்சியு மற்ற வாழ்க்கையை நடாத்துதலேன்? "பாம்! பாம்!" என்று மோட்டார் வண்டிகள் ஒரு பால் பறக்க "டகடக" என்று வேறு பல வண்டிகள் தெருவின் எனைய இடத்தையும் அடைத்துக் கொண்டு ஓட, தெருவில் செல்லும் திரளான ஜனங்கள் அதி ஜாக்கிரதையாய் ஒதுங்கி ஒதுங்கி செல்லும் அவதியே அவதி! மோட்டார் வண்டிகள் ஆரோக்கியமற்ற புகையைக் கிளப்பிக் கொண்டே தெருக்களி லிருக்கும் ஆகாயத்தை அசுத்தம் செய்தும், வேறு யந்திர சாலைகளும் அதிக சப்தமும் 'கப்' என்ற புகையையுங் கிளப்பியும் நகரத்தையே நரகமாக்கும் விநோதமே விநோதம்!! குடி யிருக்க ஆரோக்கியமான விசால முள்ள இடம் கிடைக்கப் பெறாத மாந்தர் குறைந்த வாடகையில் மிகக் குறுகிய இடங்களைப் பெற்று அதில் படும் அவஸ்தையே அவஸ்தை!!! ஓய் வின்றி எப்போதும் உழைப்ப

தால் நகர வாசிகள் இளைத்து வாடி வதங்கிச் சோர்ந்து அளிக்கும் காட்சியே காட்சி!!!

நகர வாசிகள் தங்கள் வயிற்றை அவ்வப்பொழுது நிரப்பிக் கொள்ளுவதற் கேற்ற படி ஏதேனு மொரு தொழிலில் அமர்ந்து அதில் அல்லற்பாடுகள் பல அடைந்து அவதி யுறுகின்றார்களே ஒழிய, தங்கள் அவயவங்களுக்கு ஓய்வும், மனத்திற்கு அமைதியும் தரக்கூடிய எதையும் செய்வ தில்லை. பகலெல்லாம் பாடுபட் டுழைத்த அவயவங்கள் களைத்துப் போயிருப்ப, மற்றொரு பால் மகத்தான கவலை கள் மனதினைத் தாக்க சற்றே இளைப்பாற விரும்பியும் நகர மாந்தர் நற்காற்று வீசும் இடங்களையேனும், அறிவை ஊட்டி இன்பம் பயக்கும் புத்தகங்களையேனும், அன்ப ரன்பை ஆற்றும் அன்பன் அமர்ந்திருக்கும் திருக்கோயிலையேனும் நாடுவ தில்லை. கூலி வேலை செய்யு மொருவன் பகலெல்லாம் பட்ட கஷ்டத்தினுல் நேரிட்ட சிரமத்தைப் போக்கிப் போலி உணர்ச்சியைத் தன்னுள் புகுத்த வேண்டிக் 'கள்' என்னும் காலனை நாடுவதே போல, பல வித மனக்கவலை களாலும், அவயவ அவஸ்தைகளாலும் தூரத்தப் பெற்ற நகர மாந்தர் சற்றே யாவற்றையும் மறக்க வேண்டிக் கண் காட்சிச் சாலைகளையோ, நாடகக் கொட்டகைகளையோ நாடு கின்றனர். சில மணி நேரங்களே ஆடல் பாடல்களில் உழன்று ஏனைய கவலைகள் அனைத்தையும் சற்றே மறந் திருந்த அன்னோர் அவ்வாடல் பாடல் முடிந்ததும் தங்கள் பழைய உண்மை நிலைமையை உணர்ந்து பின்னும் அதிக மான வருத்த மடைகின்றனர். கண் காட்சிச் சாலைகளுக்குச் செல்லுமுன்னர் அவர்களைத் தாக்கிய கஷ்டங்கள் அவை களுக்குச் சென்ற பிறகு பின்னும் மகத்தான கஷ்டங்களே போல காணப்படுகின்றன. கூலி வேலை செய்வோனுக்கு முதலில் கற்பகத் தருவே போன்று தோன்றும் 'கள்' கடைசியில் அவனது முடிவிற்குக் காரணமாவதே போல, பாட்டும் கூத்தும் பரம சந்தோஷத்தையும் சுகத்தையும் அளிப்பதே போல முதலில் நகரவாசிகளுக்குத் தோன்றி டினும், கடைசியில் இவை அவர்களுக்குத் துன்பங்கள் பல விளைவிக்கும் என்பதில் தடை யில்லை.

மற்றொரு விநோதத்தைக் கேளுங்கள்! நகரத்தில் வாழும் மிக எளியோனை யாகிலும் அல்லது குறைவற்ற

செல்வம்படைத்த செல்வவந்தனையாகிலும் நாம் 'உங்களுக்கு எப்பொழுது ஓய்வு உண்டு?' என்று கேட்கிறோமெனவைத்துக் கொள்வோம். அதற்கு அவர்களிருவரும் ஒரே விதமான பதிலளிப்பதே விநோதம்! தரித்திரத்தால் தாக்கப்படும் தரித்திரனும், மகத்தான செல்வம் படைத்த மண்டலேசுரனும், எனக்கு ஓய்வான நேரம் ஒரு நிமிடங்கூடக் கிடைப்பதில்லையே!" என்று கூறி ஏங்குகிறான். எளியவனல்ல, தனவந்தனல்ல நகரத்தான் ஒவ்வொருவனும் ஓய்வு நேரமின்றித் தவிப்பது எவரும் அறிந்தது. அந்தோ! நகரத்தார் மீது வீழ்ந்த சாபந்தானோ இது? இவர்கள் வாழ்க்கை என்ன வாழ்க்கை? 'ஓய்வற்ற வேலையும் எப்பொழுதும் தொல்லையும்' இவர்களது உடலைவிட்டுப் பிரியா உத்தம நண்பர்களாகின்றன. இவைகளே நகரத்தானை நடைப் பிணம் போல ஆக்கி, மன வமைதியைப் போக்கி, மட்டில்லாதத் துன்பத்தை ஊட்டி, உடலை வாட்டி, ஓய்வை நீக்கி அலைக் கழிக்கின்றன. இவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாக நகரவாழ்வு நடத்தும் நானது பலம் குறைக்கப்பட்டு, அவன் நோய்கள் பல வாய்ப்பட்டு அதி சீக்கிரத்தில் நமனுக்கு நல் விருந்தாகிறான். ஆ! இதுதானோ அதிக அழகு படைத்துள்ள நகரங்கள் செய்யும் உபகாரம்!

மற்றொரு இடத்தைக் கவனியுங்கள்! அன்னிய அநாகரிக அவதிகள் இன்னும் நுழையாத வேறொரு இடத்தைப் பாருங்கள்! சப்தமும், புகையு மற்று சந்தோஷமும் அமைதியும் குடிகொண்ட மற்றொரு இடத்தை நோக்குங்கள்! பரபரப்பும் அவசரமு மில்லாது மெதுவும் நிதானமும் வாழும் வேறொரு இடத்தைக் கூர்ந்து கவனியுங்கள்! துராரோக்கியமும் துன்பமும் அடியோடு இருக்கப் பெறாது பரந்த சுத்தமான வெளிகளைக் காணச் சற்றே வாருங்கள்!

இந்த இடந்தான் கிரமமான வாழ்வு நடாத்தப்படும் 'கிராம'மாகும். இங்கு தான் 'இயற்கை'யின் இன்பம் முழுதும் இலங்குகிறது. அமைதியும் ஆனந்தமும் இதனையே தமது இருப்பிடமாய்க் கொண்டுள. ஆரோக்கியத்திற்கும் ஆசாரத்திற்கும் பக்திக்கும் உற்பத்தி ஸ்தானமாய் விளங்குவதும் இவ்விடமே. அன்னியர் நம் நாட்டை மிதித்து

நாட்கள் பல சென்றிருந்தும் இன்னும் பழையன கழியாதும் புதியன புகாமலும் இருப்பதும் இம் மாநிலத்தில் தான்.

விடியற்காலை முதல் நாள் முழுதும் கிராமத்தின் போக்கைச் சற்றே கவனிப்போம். எவற்றிலும் யந்திரம் போலவே நடக்கப் பழகிவிட்ட நகரத்தா னொருவன் விடியற் காலை ஏதோ ஒரு குறிப்பிட்ட மணிக் கெழுந் திருக்க 'அலார' முள்ள (Alarm clock) கெடியாரத்தை எதிர் பார்க்கிறான். இயற்கையின் லீலா விநோதங்களை அனுபவிக்கும் கிராமத்தான் எதையும் எண்ணிய மாத் திரத்தில் எண்ணியபடி செய்யும் அபூர்வ வல்லமை பெற்றிருக்கிறான். 'அலார'த்தால் அவனுக்கு ஆவது ஒன்று மில்லை! 'மனோசக்தி'யால் எதையும் சாதிக்கக் கூடிய மகிமையைப் பெற்றிருக்கும் அவன் எதற்கும் இரண்டின் உதவியையே நாடுகிறான். அவையே இயற்கை யும், இயற்கையிலேயே இருந்ததால் உண்டான மனோதிட னும் எனப்படும். மாபெருஞ் செயல்களும் மனோ சக்தி யால் அதி சுலபமாய் உண்டாகும்போது சுலபமான இச் சிறு காரியங்கள் கிரமமாக நடந்தேறி வரத் தடையு முண்டோ? நமது முன்னோர்கள் ஆச்சரியம் பயக்கத் தக்க அதி அற்புதமான காரியங்களைச் செய்தனரென்றால், அது பொய்யென எண்ணி அவர்களைப் பரிகசிக்கும் நம்மனோர் மனோதிடனின் சக்தியை உணர்வரேல் அங்ஙனம் ஒரு போதும் நகை புரியார்.

ஆதித்தன் கிழக்கே உதயமாகச் சில நிமிடங்களே இருக்கும் போது கிராமம் அளிக்கும் காட்சியை என் னென்று வர்ணிப்பது? மனிதர் கூட்டத்தைக் கண்டு மரு ளாத பட்சியினங்கள் 'கா, கூ' என்று அதி இன்பமாய்க் கூவி இரைதேடப் புறப்படும் நேர்மையே நேர்மை! தங் கள் நிலங்களையோ, தங்களது எஜமானரது நிலங்களையோ உழவேண்டிச் செல்லும் குடியானவர்கள் போகும் போக்கே போக்கு! எப்பொழுதும் சுத்தமாக வைக்கப்பட்டு, கும்ப லும் வாகனங்களு மற்ற விசாலமான வீதிகளில் அதி காலையில் ஆடு மாடுகளை மேய்க்கும் நிமித்தம் இடையர் அவைகளை ஓட்டிப் போகும் விநோதமே விநோதம்! பின்னும் இன்பம் பயக்கத் தக்க இன்பமான காட்சிகளை எவ்விதம் எழுதி ஆகும்?

சற்று நேரம் கழியட்டும். கிராமத்தின் குளக்கரைப் பக்கமோ அல்லது ஆற்றோரமோ சென்று பார்ப்போம். ஸ்நானத்தைச் சிறிது வெந்நீரில் சட்டென முடித்துக்கொள்ளும் நகரத்தானைப் போலல்லாமல், கிராமத்தானெவனும், ஆழ்ந்த ஜலத்தில் அமிழ்ந்து ஸ்நானஞ் செய்து அழுக்குத் தேய்த்து அதிக நேரம் குளிப்பது கண்கூடு. இங்ஙனம் விடியற் காலையில் ஸ்நானத்தை முடித்துக்கொள்ளும் இவர்களனைவரும் தங்கள் தங்களுக்குள்ள மதச் சின்னங்களைத் தங்கள் நெற்றிகளில் விட்டுக் காலை ஜபத்தை அதி சிரத்தையுடன் செய்வதைக் காணும் நகரத்தானெவனுக்கும் மயிர்க்கூச்ச லெடுக்கும்.

இப்போது வேறோர் இடம் செல்வோம். எவ்வித 'மிலிட்டரிப் பயிற்சியும்' (Military Drill) பெறாத கிராம ஊழியர்கள் ஒரே வரிசையாக நிலத்தில் நின்று களைபிடுங்கும் ஒழுங்கு தான் என்னே? நிலத்தில் உழும் இரண்டு மூன்று ஜதை மாடுகளும், பழக்கப்பட்ட சிப்பாய்கள் ஒருவர் பின் னொருவராக ஒழுங்காகவும் ஒய்யாரமாகவும் நடந்து செல்வதே போல, ஒன்றன்பின் னொன்றாகக் கலப்பைகளை இழுத்துச் செல்லும் நேர்மையைக் காண்போன் ஆச்சரிய மடையாமலும் போவனோ? நகரத்தில் பாட்டுக் கச்சேரிக்குப் பணங் கொடுத்துச் செல்லும் ஒருவன் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் ஏற்றத்தினருகே சற்று செல்லட்டும். தனது தேகத்தில் வேலையின் இளைப்பு தோன்றாத வண்ணம் ஏதோ ஒரு பாட்டைப் பாடிக் கொண்டே தண்ணீர் இறைப்பவனது குரல் ராகமும் கானமு மற்றதாயினும் இன்பம் பயக்காது போமோ? இவ்வித இயற்கை இன்பங்கள் இங்கு தான் உண்டு. ஆகவே சுகமான வாழ்க்கையும் இவ்விடந் தவிர வேறெங்குங் கிடைக்கப் பெறாது.

ஆதித்தனது கிரணங்கள் அதி உக்கிரமாய்த் தாக்கத் தொடங்கும் வரை கிராமத்தில் எங்கணும் இவ்வித காட்சிகள் நிரம்பி யிருக்கும். மணி சுமார் பதினொன் றானதும் உழவர்களும் ஏனையோரும் தங்கள் வாசஸ்தானங்களை அடைந்து சற்றே இளைப்பாறுகின்றனர். பகலில் சுமார் நாலுமணி வரையில் கிராமம் மிக்க அமைதியா யிருக்கிறது. படாடோபங்களுடன்கூடிய பரபரப்பை விட, அமைதியால் மனிதன் அறிவது அனேகம். அதனால் அவன் அடையும்

ஆனந்தம் அனந்தம். ஆகவே அவன் நடத்தும் வாழ்வு அல்லற்படாத சுத்தமான இயற்கை இன்பம் இலங்கும் இனிய வாழ்வாம்!!

காலை ஆதித்தன் அளித்த காட்சிகளைக் கண்டதால் களிகூர்ந்தவன் மாலையில் பின்னும் அதிக இன்ப மடைவான் என்பதில் தடையில்லை. வேலையினின்று திரும்பும் குடியானவர்கள் கலப்பைகளைத் தங்கள் தோள்களில் தாங்கி மாடுகளை ஓட்டிச் செல்வர். காலை இரைதேடச் சென்ற பறவையினங்கள் மாலையில் அதி இன்பமாய்க் கூவிக்கொண்டு கூட்டங் கூட்டமாய்த் தங்கள் கூடுகளை நோக்கித் திரும்பிச் செல்லும். வயிறார மேய்ந்து திருப்தி யடைந்த ஆடு மாடுகள் கூட்டங் கூட்டமாய்த் திரும்பி வரும்போது அவை அளிக்கும் தோற்றம் நமக்கு என்றென்றுந் தெவிட்டாதது. இச்சமயத்தில் சற்றே மேற்கே பார்ப்போம். ஆதித்தன் மலைவாயில் விழும் சமயம்! உலகெலாம் ஒரே சிவப்பும் மஞ்சளுங் கலந்த சாயம் பூசப்பட்டதே போல விளங்க, மேற்கே ஆகாயம் சிவந்த சிறப்பான காட்சியை அளிக்க, தோப்புந் துறவும் இயற்கை யெனும் போர்வையால் மூடப்பெற்று தேவலோகமே போலத் தோன்ற வேறு இன்பமும் இவ்வுலகினில் உண்டோ? இம் மண்ணுலகில் மனிதனுக்குச் சுக மளிப்பதும் இதைத் தவிர வேறொன் றிருக்குமோ? ஆ! இந்த ரமணீய காட்சியை நாம் வர்ணிப்பது யாங்ஙனம் இயலும்?

இவ்விதம் இயற்கையின் ரமணீய காட்சியில் ஈடுபட்டு வாழும் கிராம வாசிகள் நோயும் துன்பமு மில்லா ஆரோக்கியமும் ஆனந்தமுங் குடிகொண்ட ரஸமான வாழ்க்கையை நடாத்துகின்றனர் என்பதில் ஆச்சரியப் படக் காரணமுண்டோ?

இங்கு நாம் நமது நகர சகோதரர்களை வேண்டிக் கொள்வதொன்றுண்டு. அதாவது இப்போது இன்னல்கள் பல விளைக்கும் நகரங்கள் முதலில் கிராமங்களாகவேயிருந்தன. அதே போல இப்போது இருக்கும் கிராமங்களும் நகரத்தாரது முயற்சியாலும், அன்னியர் சேர்க்கையாலும் அங்ஙனமே நகரங்களாய் விடலாம். இப்போது இந்தியாவிற்குள் இருக்கும் நகரங்கள் போதுமானவை. நகரத்திலிருக்கும் நரர்கள் மட்டும் படும் பாடுகள் போதும்.

அமைதியா யிருக்கும் கிராமங்களையும் நகராங்க ளாக்கி அங்குள்ளார்க்கும் இன்னல்கள் நேரிடச் செய்யாம விருக்க வேண்டு மென்பதே எமது கோரிக்கை.

கிராம வாழ்வெனும் இன்ப வாழ்வு நடாத்தும் சகோதரர்களே! நீங்கள் நகரத்தை யேனும், நகரத்தானை யேனும் உங்களிடம் சேர்க்காதீர்கள். நகர மெங்கிருக்கிறதோ அங்கே நரக மிருக்கும். நகரத்தான் எங்கெங்கு போகிறானோ, அங்கங்கு ஆனந்தம் தங்காது. அறியாமலோ, அறிந்தோ நகரப் பழக்கங்களைப் பின்பற்றத் தொடங்குவீர்களாயின், அதுவே உங்களுக்குப் பல துன்பங்களை விளைக்கும் என்பதில் தடையில்லை. 'நகரம்' என்பது ஒரு தொத்து வியாதி என்பதை நீங்கள் என்றும் மறத்த லாகாது.

இறுதியாக அன்னியரது சேர்க்கையில் அநேக துன்பங்க ளடைந்துள்ள நமது தேசத்தின் கிராமங்களிலேனும் என்றென்றும் அழகிய காட்சிகள் நிறைந்த அமைதியான வாழ்க்கையே நிலவுமாறு அருள எல்லாம் வல்ல ஈசனை எத்தித் தொழுவோ மாக.

மதிப்புரை

ராஜா கோபிச்சந்து என்னும் புஸ்தகம் ஒன்று எங்கள் பார்வைக்குக் கிடைத்தது. "பக்தியே சிறந்த கதி மோக்ஷம்" என்னும் கருத்திற் கிணங்க நாடக ரூபமாக, அழகிய தமிழ் நடையில் எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எழுதி யுள்ளது. உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அழகிய படங்களும் அச்சிடப்பட்டுள்ளன. வேண்டுவோர், மா. ரத்னசபாபதி முதலியார், 4 முல்லா சாகிபு சந்து, ஜி. டி. சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

நேயர்களே!

நமது லக்ஷ்மி பைண்ட் புஸ்தகம்

படித்திருக்கிறீர்களா?

ஆண், பெண், சிறியோர் முதல் பெரியோர் வரை படித் தின்புறக் கூடிய அநேக சிறந்த பாடல்கள், கதைகள் நாவல்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. கண்ணைக் கவரும் அநேக சித்திரப் படங்களும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு வால்யமும் அழகாக பைண்ட் செய்யப்பட்டு 624 பக்கங்களுடன் கூடியது.

1வது வால்யம்	விலை ரூ.	3 0 0
3வது ஷை	,,	3 0 0

லக்ஷ்மி ஆபிஸ்,

தபால் பெட்டி 99, சென்னை.

2 10365

MARI SILK SARI :: ::

:: :: மேரிப் பட்டுப் புடவை

6 கெஜம் × 44" அகலம், அழகிய ஜரிகைக் கரைகள். அசல் 50, 60, ரூ. பட்டுப் புடவைகளைப் போலவே இருக்கும். கண்ணைக் கவரும் புது மாதிரியான பல மேக வர்ணக் கலர்கள் முதலியன.

விலை ரூபா 10 0 0

K. S. Muthiah & Co.,

Post Box No. 99

MADRAS.

நல்ல ஆரோக்கியத்தை வேண்டாதார் யார்?

தாசன் முதல் ராஜன் வரை எல்லோரும் ஆரோக்யத்துடனிருக்கப் பிரியப்படுகிறார்கள். நமது தேசத்தில் ஜனங்களின் சுகத்தைக் கொள்ளை கொள்ளும், கணக்கிட முடியாத வியாதிகளால், ஆங்கில, ஆயுர்வேத சித்த, யுனானி, வைத்தியங்களுக்குப் பணத்தைக் கொட்டி கஷ்டப்படுகிறவர்கள் பலகோடி! கீழ்கண்ட நமது சுதேச ஒளஷதங்களை ஒவ்வொரு குடும்பத்திலும் உபயோகித்து வந்தால் எவ்வித வியாதிகளும் தலைகாட்டும் என்ற சந்தேகமே யிராது. இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

நயம்	கஸ்தூரி	தோலா 1-க்கு	விலை	ரூ. 35—0—0
,,	கோரோசனை	,,	,,	ரூ. 15—0—0
,,	பச்சைக்கற்பூரம்	,,	,,	ரூ. 2—8—0
,,	குங்குமப்பூ	,,	,,	ரூ. 2—8—0
,,	பால்காயம்	தோலா 10-க்கு	,,	ரூ. 1—0—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, சென்னை.

(இவைகளுக்கு 5-வருஷம் உத்திரவாதம்)

1. 4. ரூ. மதிப்புள்ள ஒரு "ஜென்ட்ஸ்" பாக்கட் லிவர் கெடியாரம், சிறிய அளவுள்ளது, குண்டுக்கு சரியான மணி காண்பிக்க கூடியது அழகான வடிவமானது.



2. ரூ. 2 12 0 விலையுள்ள ஒரு லேடிஸ் & ஜென்ட்ஸ் "கிப்ஸி" ஜெர்மன் வைரமோதிரம் 22-கார்ட் தங்க ஷெல்லில், தயாரிக்கப்பட்டது தங்கநிறம் மாறாதது. உத்திரவாத முத்திரையுடையதும் ஜோலி ஜொலிப்புள்ளது.

3. ரூ. 1 12 0 விலையுள்ள "ராயல்" 14-கார்ட் கோல்டன் நிப்புள்ள பவுண்டன் பேனா. எழுதுவதற்கு மிருதுவாயும் அழகான ஆல்க்கலைட் சுரையுள்ள கிளிப்புடனும் கூடியது.

4. ரூ. 4. விலையுள்ள "ஸ்டார்" எலக்டிரிங் டிராவர்ஸ் கைவிளக்கு சுவற்றில் மாட்டக்கூடியது. உயர்ந்த பல்பும் வெளிச்சத்தை தாத்தக்க பூதக்கண்ணாடியும் உள்ளது. எந்த சமயங்களிலும் வெளிச்சத்தை தரக்கூடியது.

மேல்கண்ட நான்கும் விலை ரூபா **6.**

சென்டரல் இந்தியா வாட்சு கம்பனி.

சுப்பிரமணி முதலி தெருவு, மதராஸ்.

சூரத் சில்க் புடவை.

கை நெசவில் நெய்தது. நல்ல பார்வையான புடவை. அழகாக $1\frac{1}{2}$ இஞ்சில் கரைக்கு ஜரிகை பேட். முகதலைக்கு ஜரிகை. புது மாதிரியான ரகம். நாகரீகமான ஆடை.

1. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடல் சாதா ஜரிகைக் கரை ஜரிகை முக தலை புடவை 1-க்கு ரூ. 12—0—0
2. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடலில் பட்டுப்பூ ரூ. 16—8—0
3. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடலில் ஜரிகை தந்திக் கம்பி ரூ. 20—0—0
4. 16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் திக்கான ஜரிகைக் கொட்டடி ரூ. 25—0—0
5. 12 மு × 44" உடல் சாதா ஜரிகை போட்ட ஜரிகை முகதலை ரூ. 10—0—0

☞ பச்சை, மயில் கழுத்து, ரோஸ், ஆரஞ்சு, தங்கக் கலர், மேகவர்ணம் முதலிய கலர்களில் புடவை கிடைக்கும்.

K. S. Muthiah & Co.,

Export Dept.

POST BOX 99. :: :: MADRAS.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா.
பத்திராசிரியர் : K. S. சுந்தரம்.

மலர் 4. { பிரபவஞு ஆனிமீ 1927 ஜூன்மீ } இதழ் 11.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	515
2.	சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு	516
3.	அயம் அல்லது இரும்பு	517
4.	கோழி வளர்த்தல்	524
5.	அறிவின் பயன்	528
6.	திருநீலகண்ட நாயனுர் சரிதை	532
7.	உருத்திர சூக்தம்	535
8.	பழமொழி திருத்தம்—களவுங் கற்றுமற ...	544
9.	படிக்குப்படி	547
10.	புகையிலைப் பயிர்	551
11.	ஐம்புல வேடர் கும்மி	556
12.	பிராணுயாமம்	557
13.	ஆங்கிலக் கல்வியும் அரசாங்க சேவையும் ...	561
14.	வள்ளுவர் பற்றி வழங்கும் ஓர் கதை ...	562
15.	நந் தமிழ்நாட்டுச் செந்தமிழ்க் கும்மி ...	566
16.	வீரபாலன் விநோதக் கதைகள்	567
17.	விகடத் துணுக்குகள்	572
18.	லக்ஷ்மி பஞ்சாங்கம்—ஜூலைமீ	573

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியில் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாக சேர்த்துவிட, கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

80 வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மேடல்கள் நற்சாட்சி பத்திரங் ள் பெற்றது.

ஷண்முகம் பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது ? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள் !

பலம்.	விலை.	தபால்சிலவு.	பாக்கிங்.	மொத்தம்.
8	ரூ. 1 0 0	0 5 0	0 1 0	1 6 0
20	,, 1 12 0	0 8 0	0 2 0	2 6 0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.

ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)

போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுபடுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

A. S.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

தீபாவளிப் பண்டிகைக்கு இவைகளில் எது வேண்டும்?

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு, ஜரிகையினால், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு, இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேக மில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷை கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade, *Phone : No. 2693.*

தீபாவளி! தீபாவளி!!

தமிழ் நாட்டவர்களுக்கு முக்கிய நாளும்
வருஷத்திற்கு ஒரு நாளுமான

தீபாவளி பண்டிகை

வரப்போகிறது: அப்பொழுது

முத்தையாவ்ஸ் நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா வெள்ளை, ஸ்கைப்புளு, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பார்வைக்குப் பள பளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக்கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room : 287, Esplanade. ***Phone : No. 2693.***

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.